இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 14 | திகதி : 06.09.2020 | விலை : 30.00

## காணமலாக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் உடன் அரசாங்கத்துடன் பேசியே ஆகவேண்டும் – யாழ் ஆயர்



தேசிய நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவரும் யாழ் மறைமாவட்ட ஆயருமாகிய பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தலவில புனித அன்னாள் யாத்திரைத்தலத்தில் நடைபெற்ற தேசிய ஆணைக்குழுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை உப தலைவர் பேரருட்கலாநிதி மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை, தேசிய இயக்குநர் அருட்பணி G. மகேந்திரா மற்றும் அனைத்து மறைமாவட்ட கரித்தாஸ் - நீதி சமாதான ஆணைக்குழு இயக் குநர்கள் அடங்கலாக இத் தேசியக் கூட்டம் நடைபெற்றது. இவ் ஒன்று கூடலில் வடக்குக் கிழக்கு காணா மலாக்கப்பட்டோர் அரசியல் கைதிகள் மட்டிலான தீர்வு இன்னும் எட்டப்படாத நிலையில் அதற்கான பதிலை அரசிடமிருந்து உடன் பெறுவதற்கு ஆவனசெய்யுமாறு யாழ். மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி எஸ்.வி.பி. மங்களராஜா அடிகளார் தம் அறிக்கையில் முன்வைத்திருந்தார். இவ்விடயங்களை ஆராய்வதற்கு ஒரு குழுவை உடன் அமைத்து அக்குழு ஆயர் பேரவைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து இலங்கை ஆயர்கள் பேரவையினூடாக அரசாங்கத்தின் கவனத்தில் கொணர்ந்து இதற்கான தீர்வைப் பெற்றாக வேண்டுமென்று இத்தேசிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதேவேளை நுரைச்சோலை அனல் மின் நிலையம் அமைவதன் வழியாக ஏற்படும் சூழல்மாசடைதல் பற்றியும் பேசப்பட்டு இவ் விடயத்தையும் அரசாங்கத்தின் கவனத்திற் கொணர்ந்து தக்க தீர்வைத் தரவேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## துணை ஆயராக பேரருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அருட்பொழிவு



கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக அருட்தந்தை அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கடந்த 29ம் திகதி கொழும்பு கொட்டாஞ் சேனை புனித லூசியாள் பேராலயத்தில் பேராயர் கர்தினால் மல்கம் இரஞ்சித் ஆண்டகையினால் திருப்பொழிவு செய்யப்பட்டார். அன்றைய திருப் பொழிவுத் திருச்சடங்கு மிக விமரிசையாக கருத்துள்ள விதத்தில் தற்போதைய சுகாதார, பாதுகாப்பு நடைமு றைகளுக்கு அமைவாக நடைபெற்றது.

இத்திருப்பலியில் சுமார் 500க்கும் மேற்பட்ட குருக்கள், துறவியர்களும், ஆயர் பேரவையின் அனைத்து ஆயர்களும், ஓய்வுபெற்ற ஆயர்களும் கலந்து சிறப்பித்தனர். ☞ 11

## இராமநாதபுரம் புனித ஆரோக்கியநாதர் ஆலயம் புனரமைப்பு



கிளிநொச்சி இராமநாதபுரம் புனித ஆரோக்கியநாதர் ஆலயமானது புனரமைக்கப்பட்டு யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் 23.08.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப் பட்டது. வட்டக்கச்சிப் பங்குத்தந்தை அருட்திரு பாலதாஸ் பிறாயன் அடிகளாரின் தலைமையில் இந்நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

## பரந்தன் ஆலயவளாகம் புதுப்பொலிவு பெற்றது





பரந்தன் புனித அந்தோனியார் ஆலயப் பங்குப் பணிமனை புனரமைப்பு செய்யப்பட்டு 03.09.2020 வியாழக்கிழமை யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் ஆலய வளாகத்தின் நுழைவாயிலில் அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் சுருபம் திறந்து வைக்கப்பட்டதுடன் ஆலயத்தில் கல்லறை ஆண்டவர் சுருபமும் ஆலய வளாகத்தில் இருந்த பழுதடைந்த கிணறும் புனரமைக்கப்பட்டு பங்குப்பாவனைக்காக மீண்டும் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வுகளானது பங்குத்தந்தை அருட்திரு R.H.சகாயநாயகம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.

பரந்தன் பங்கைச் சார்ந்த இறைமக்களினதும் வெளிநாட்டில் வாழ்கின்ற உறவுகளி னுடைய நிதிப்பங்களிப்புடனும் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருக்குடும்பக் கன்னியர் சபையின் 200 வது யூபிலி நிறைவு விழா





உலகலாவிய ரீதியில் திருக்குடும்பக் கன்னியர்கள் தங்கள் சபை உருவாக்கப்பட்டு 200 வருட நிறைவைக் கொண்டாடும் வேளையில் வட மாகாண திருக்குடும்ப கன்னியர் சபையினர் பல ஆயத்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். யூபிலி ஆண்டின் நிறைவாக கடந்த 27.08.2020 அன்று காலை 7.00 மணிக்கு வட மாகாண யூபிலிக் கொண்டாட்டமும் மற்றும் நன்றித் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் மற்றும் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர், அமலமரித்தியாகிகளின் வடமாகாண முதல்வர் அடங்கலாக பலர் இந்நிகழ்வில் பங்கெடுத்தனர்.

திருக்குடும்ப கன்னியர் சபையின் வட மாகாணத் தலைவி அவர்களுக்கும் அருட் சகோதரிகளுக்கும் "பாதுகாவலன்" வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## ஜனநாயகத்துக்கு மாறான சட்ட ஏற்பாடுகளும் தமிழ் மக்களும்

ஒரேநாடு ஒரு சட்டம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாடாளுமன்ற முதல் அமர்வில் நிகழ்த்திய அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையில் கூறியுள்ளமை ஆச்சரியப்படக் கூடியதல்ல. ஏனெனில் இலங்கை பிரித்தானியரிடமிருந்து இறைமையும் தன்னாதிக்கமும் உள்ள நாடாக மாறியபோதே இலங்கை ஒற்றையாட்சி அரசு (Unitary State) நிறுவப்பட்டுள்ளது. 1972ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட முதலாம் குடியரசு அரசியலமைப்பு ஒரே நாடு ஒரு சட்டம் என்பதையே மறைமுகமாகவும் நேரடியாகவும் பிரகடனப்படுத்தியது. சிறி மாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கம் கொண்டுவந்த முதலாம் குடியரசு அரசியல் யாப்பின் அரச கொள்கைத் தத்துவம் பௌத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

பிரித்தானியரால் 1947இல் அமுல்படுத்தப்படட சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மையோர் பாதுகாப்புக்காகப் பிரத்தியேகமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 29ஆவது பிரிவு நீக்கப்பட்ட நிலையில் முதலாம் குடியரசு அரசியல் யாப்பை சிறிமாவோ பண்டாரநாயக்கா உருவாக்கியிருந்தார்.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற ஜே.ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஐந்தில் ஆறு பெரும்பான்மைப் பலம் பெற்று 1978ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பை உருவாக்கியது. அதுவே இலங்கையில் எழுதப்பட்ட நெகிழும் தன்மையுடை அரசியல் யாப்பு நடைமுறையில் இருப்பதால் காலத் திற்குக் காலம் ஆட்சியமைக்கும் கட்சிகள் தங்கள் பெரும்பான்மைப் பலத்தை வைத்துக் கொண்டு அரசியல் யாப்பு மாற்றங்களை அல்லது யாப்புத் திருத்தங்களை செய்வது வழமை அதுதான் 1972-78ஆம் ஆண்டுகளில் நடந்தது. ஆனால் அன்று தொகுதிவாரித் தேர்தல் நடை முறையில் இருந்ததால் மிகவும் இலகுவாக ஐந்தில் ஆறு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற ஜே.ஆர். 1978இல் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பை உருவாக்கிப் பிரதமர் ஆட்சி முறையை மாற்றி நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவந்தார். அத்துடன் தொகுதிவாரித் தேர்தல் முறையையும் மாற்றி. விகிதாசாரத் தேர்தல் முறையை அறிமுகம் செய்தார். அந்த யாப்புத்தான் இன்றுவரை 19 திருத்தங்களோடு நடைமுறையில் உள்ளது. மைத்திரி-ரணில் அரசாங்கத்தினால் 2016ஆம் ஆண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் அமுல்படுத்தப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டம் ராஜபக்ச குடும்பத்தை மீளவும் ஆட்சியமைக்க முடியாதவாறு கொண்டுவரப்பட்டதெனக் குற்றம் சுமத்தினாலும், அரச நிறுவனங்களைச் சுயாதீனமாக இயங்கக் கூடிய பல சரத்துகள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

குறிப்பிட்டுச் சொல்வதானால், ஐக்கிய தேசியக் கட்சி. சிறிலங்கா சுதந்திரக் கட்சி. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. ஜே.வி.பி ஆகிய கட்சிகளின் சம்மதத்துடன் சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய 17ஆவது திருத்தச் சட்டத்தின் உள்ளடக்கமே இந்த 19ஆவது திருத்தச் சட்டம். தேர்தல், பொலிஸ், பகிரங்க சேவை உள்ளிட்ட அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றைச் சுயாதீனமாகச் செயற்பட வைக்கும் நோக்கில் நிறைவேற்றப்பட்ட 17ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அரசியலமைப்புச் சபையை உருவாக்குவதில் 13ஆண்டுகள் இழுபறி ஏற்பட்டது. பிரதான இருகட்சிகளும் அந்த விடயத்தில் விட்டுக் கொடுக்காமல் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டன.

அதனால் 2014ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது அமுல்படுத்தப்படாமல் இருந்த 17ஆவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்து, 18ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றினார். இதன் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களையும் அமைப்பதற்குரிய நாடாளுமன்றச் சபையும் உருவாக்கப்பட்டது. ஆனாலும் பிரச்சினை என்னவென்றால். ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற புதிய சட்டம் ஒன்று அமுலுக்கு வந்தது. அத்துடன் இலங்கைத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இதனால் வடக்குக் கிழக்கு மாகாண சபைக்கென்று இருந்த மாகாண பொலிஸ் ஆணைக்குழுவும் செயலிழந்தது.

இவ்வாறான நிலையில் 19ஆவது திருத்தச் சட்டமும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. 20ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றம், பிரதமர் ஆகியோருக்குரிய அதிகாரங்களை இல்லாமல் செய்து தனியே நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கு மாத்திரம் சர்வவல்லமை கொண்ட அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளமை ஜனநாயகத்துக்குரிய சூழல் அல்ல.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

## சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் நீதி சமாதான ஆணைக்குழுவின் அறிக்கை

சர்வதேச காணாமல் போனோர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் ஆகஸ்ட் 30ம் திகதி நினைவு கூரப்படும் வேளையில் யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு ஓர் அறிக்கையை வெளியிட்டது. அவ்வறிக்கையாவது:

இலங்கையின் வடக்குக் கிழக்கிலும் 15,000 க்கு மேற்பட்டோர் போர்க்காலத்திலும் அதனைத்தொடர்ந்து வந்த வருடங்களிலும் காணமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை மீட்டுத்த தருமாறு அல்லது இவர்களுக்கு என்ன நடந்தது என்று பொறுப்புக் கூறுமாறு இவர்களுடைய பெற்றோரும் உடன்பிறப்புப்களும், உறவுகளும், மனித உரிமை ஆர்வலர்களும் ஏறக்குறைய 3 வருடங்களாகத் தொடர்ந்து சாத்வீகப் போராட்டம் நடாத்தி வருகின்றார்கள் தற்போது ஆட்சியிலுள்ள அரசின் காலத்தில் தான் இவர்களுள் பெரும்பாலானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த மக்கள் இராணுவத்தினரிடம் விசாரணைக்காக கையளிக்கப்பட்டவர்கள், விசாரித்த பின் விடுவோம் என்று இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள். வெள்ளைக் கொடியுடன் சரணடைந்து இராணுவத்தினால் அவர்களது வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் இவர்களுள் அடங்குவர். இவர்களுக்கு என்ன நடந்தது என்று தான் இவர்களது உறவுகள் கேட்கின்றனர். இதற்கு அவர்களை மண்ணுக்குள் தான் தேடவேண்டும், அவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றிருக்க வேண்டும் என்ற பொறுப்பற்ற பதில்கள் அரச தரப்பினரிடமிருந்தும் அரச தரப்புபேச்சாளரிடமிருந்தும் வருவது ஏமாற்றம் அளிக்கின்றது.

ஏற்கனவே காணமல் ஆக்கப்பட்டவர்களது பெற்றோர் (தாய் அல்லது தகப்பன்) மத்தியிலிருந்து 40 வரையிலானோர் கவலையாலும், மன அழுத்தத்தாலும், பிரிவுத்துயர் தாங்க முடியாமலும் இறந்து விட்டார்கள் என்பதனை வருத்தத்துடன் அவதானிக்கின்றோம்.

எனவே ஆகஸ்ட் 30ம் திகதி இம்மக்கள் முன்னேடுக்கும் சாத்வீகப் போராட்டத்திற்கு எமது முழு ஆதரவை தெரிவிக்கின்றோம் சர்வதேசம் இம் மக்களின் கண்ணீர் துடைத்து ஆறுதல் அளிக்க தமது நாட்டின் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம் என அவ்வறிக்கை அமைகின்றது.

## துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாண மறைமாவட்ட அருட்பணியாளரும் புதுக்குடியிருப்பு றோ.க.த. வித்தியாலய அதிபருமாகிய அருட்ணி A.றொபின்சன் ஜோசப் அடிகளாரின் அன்புத் தாயார் **திருமதி அருளப்பன் மேரி அஞ்சலீனா** அவர்கள் கடந்த 01.09.2020 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## நாட்டை பிளவுபடுத்தும் சமய மற்றும் இனக் கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும்

### கர்தினால் மல்கம் ரஞ்சித்

நாட்டைப் பிளவுபடுத்தும் சமய மற்றும் இனக் கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும் என்று இலங்கைக் கர்தினால் மல்கம் இரஞ்சித் ஆண்டகை தேசிய நோயாளர் நாளன்று ஆற்றிய மறையுரையில் வலியுறுத்தினார்.

இலங்கையின் தேசிய நோயாளர் நாளையொட்டி தேவத்தையிலுள்ள இலங்கை அன்னை மரியா திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றிய, கொழும்புப் பேராயர் கர்தினால் இரஞ்சித் ஆண்டகை எம்நாட்டில் சமயத் தீவிரவாதம் மிகவும் ஆபத்தான முறையில் பரவி வருகின்றது என்று கூறினார்.

கடந்த ஆண்டு உயிர்ப்புப் பெருவிழா அன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் பற்றியும், குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் நிலவும் மந்தநிலை பற்றியும் குறிப்பிட்ட கர்தினால் இரஞ்சித் ஆண்டகை, மதம் மக்கள் மத்தியில் பிரிவினைகளை உருவாக்கவோ அல்லது அவர்களைக் கொல்வதற்கோ பயன்படுத்தப்படக் கூடாது என்று கூறினார்.

ஒரு மதம் அடுத்தவரை அழிக்கின்றது என்றால், அதன் அர்த்தம் என்ன? அத்தகைய கடவுள் எங்கே இருக்கின்றார் என்று காட்டுங்கள் என்று சவால்விடுத்த கர்தினால் இரஞ்சித் ஆண்டகை பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு, மதத் தலைவர்கள் பொறுப்பாக இருந்தால், அது அதிர்ச்சி தருகிறது என்று கூறினார்.

கடந்த ஆண்டு உயிர்ப்புப் பெருவிழா அன்று, இரு கத்தோலிக்க ஆலயங்களும், ஒரு கிறிஸ்தவ சபை ஆலயமும், மூன்று பயணியர் விடுதிகளும் பயங்கரவாதத்தால் தாக்கப்பட்டன. இவற்றில் 45 வெளிநாட்டவர் உட்பட ஏறத்தாழ 280 பேர் இறந்தனர்.

இவை நடந்து ஓராண்டு ஆகியும், இன்னும் நீதி கிடைக்கவில்லை என்றும், இந்தத் தாக்குதல்களில் குண்டுகளை வைத்தவர்கள் யார், இதைத் திட்டமிட்டவர்கள் யார், இதற்கு நிதியுதவி செய்தவர்கள் யார் என்பதை அதிகாரிகள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்றும், இலங்கைக் கர்தினால் கூறினார்.

## நீண்ட நாட்களுக்குப் பின் மக்களைச் சந்தித்த திருத்தந்தை

கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக, மக்கள் சந்திப்பு என்ற மகிழ்வான அனுபவத்தைத் துறந்து, நோன்பு போன்ற ஓர் அனுபவத்தைக் கடைபிடித்துவந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மீண்டும், செப்டம்பர் 2ம் திகதி, வத்திக்கானில் உள்ள புனித தமாசோ திறந்த வெளியரங்கில் மக்களைச் சந்தித்தார் என்று, வத்திக்கான் செய்தித்துறை கூறியுள்ளது.

இவ்வாண்டு பிப்ரவரி 26ம் திகதி திருநீற்றுப் புதனன்று, மக்களை, புனித பேதுரு வளாகத்தில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சரியாக 189 நாட்களுக்குப் பின், மீண்டும் மக்களைச் சந்தித்தார். இடைப்பட்ட காலத்தில் பாப்பிறை இல்லத்தின் நூலக அறையிலிருந்து தன் மறைக்கல்வி உரைகளை வழங்கிவந்தார்.

புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்திலும், புனித 6ம் பவுல் அரங்கத்திலும் தன் மறைக்கல்வி உரைகளை வழங்கி வந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கோவிட் 19 கொள்ளைநோய் நெருக்கடியால், மார்ச் 11ம் திகதி முதல், தன் மறைக்கல்வி உரைகளை, பாப்பிறை இல்லத்தின் நூலக அறையிலிருந்து, நேரடி ஒளிபரப்பின் வழியே வழங்கிவந்தார்.

மக்கள் சந்திப்பை, தன் தலைமைப்பணியின் ஒரு முக்கிய பகுதியாகக் கொண்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த சந்திப்பிற்கு உதவியாக, தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் காலை ஏழுமணிக்கு நிறைவேற்றும் திருப்பலியிலும், புதன் மறைக்கல்வி உரைகளிலும் மக்களைச் சந்தித்து வந்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கும் மறைக்கல்வி உரையைக் கேட்க, கிறிஸ்தவர்கள் அல்லாமல், ஏனைய மதத்தவரும் பல்வேறு நாடுகளிலிருந்து வருவதைக் காணமுடிகிறது.

காவலன் கலசம்

# அரசியல் யாப்பு 20வது திருத்தச்சட்டம்

## - ஒரு கிறிஸ்தவ பார்வை -

அசுரபலத்துடன் ஆட்சியமைத்திருக்கும் மொட்டுக் கட்சியினரின் முதலாவது நிகழ்ச்சி நிரல் அரசியலமைப்பு மாற்றமே. தேர்தலில் மக்களின் ஆணை இதுவே என முழக்கமிடுகின்றனர். முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலும் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பை முழுமையாக மாற்றாமல் 19 ஆவது திருத்தச் சட்டத்தில் சில மாற்றங்களுடன் 20வது திருத்தசட்டமாக மாற்றுவதே அரசின் தற்போதைய திட்டமாகும். ஆனால் கடும் போக்காளர் முற்றாக மாற்றவேண்டும் என்ற நிலைப்பாட்டிலுள்ளனர். எனவே இது விடயமாக ஆளும் கட்சியினர் இன மத சிறுபான்மை, எதிர்க்கட்சிகள் தம் அதிருப்திகளைப் பதிவு செய்துள்ளனர். தற்போது நிபுணர் குழுவிடம் இது கொடுக்கப்பட்டுள்ளது.

### நலம்சார்ந்த அரசியலமைப்பு மாற்றங்கள்

கடந்த சில தசாப்தங்களாக சிறிலங்காவில் அரசியலமைப்பு உருவாக்கமோ அல்லது திருத்தமோ மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற அரசியல் கட்சிகளின் குறிப்பாக கட்சியின் உயர் நிலையிலுள்ளோரின் நலம் சார்ந்து உருவாக்கப்பட்டதேயன்றி, நாட்டு மக்களின் நலம் சார்ந்து உருவாக்கப்பட்டதாக ஆதாரங்கள் கிடையாது. 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பானது தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களைப் புறம்தள்ளி உருவாக்கப் பட்டதாகும். எனவே, தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் அப்போது அரசியலமைப்பு நாடாளுமன்ற செயல் நடவடிக்கையிலிருந்து வெளியேறினர்.

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பும் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை உள்வாங்காது நிறைவேற்றப்பட்டது. எதிர்க்கட்சியினர் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை சர்வாதிகாரத்திற்கு வழிவகுத்து ஜனநாயகப் போக்கை மழுங்கடித்துவிடும் என்று வாதிட்டனர். இரண்டு அரசியலமைப்பு உருவாக்கத்திலும் அனைத்துத் தரப்பினரின் ஒப்புதல், ஒத்துழைப்புப் பெறாமல் நிறைவேற்றப்பட்டமையானது ஜனநாயக பாரம்பரியத்தைப் புறம்தள்ளி செயற்பட்டதாகக் கணிக்கப்பட்டது.

2015 இல் நல்லாட்சி அரசு, ஆட்சியமைத்தவுடன் நூறு நாள் வேலைத்திட்டத்தில் கொண்டுவரப்பட்ட 19வது திருத்தச் சட்டம் ராஜபக்சாக்களின் அரசியல் நடவடிக்கைகளைத் தடை செய்யும் நோக்கம் கொண்டதாகவே அமைந்திருந்தது. ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக கோத்தபாயா ஜனாதிபதியானது ஒரு திருப்பம் மட்டுமல்லாது ரணிலின் ஜனாதிபதிக் கனவைக் கலைத்தது.

13ஆவது திருத்தச்சட்டம் கூட உள்ளூர் அரசியல் சக்திகளின் நலன்களையல்ல, மாறாக இந்தியாவின் நலன்களை மையப்படுத்தியதாக அமைந்திருந்தது. ஒரு நாட்டின் அதியுயர் சட்டவாக்க உருவாக்கத்தில் மக்களின் நலன்களைப் புறம்தள்ளி ஒரு சில அரசியல் சக்திகளின் நலன்களை மையப்படுத்திய அரசியலமைப்பு உருவாக்கமே இந்த நாட்டில் நடைபெற்றுள்ளது. இந்நிலையானது ஜனநாயகப் போக்கிற்கு முரணாணதாகவே காணப்படுகின்றது.

### 20வது திருத்தச்சட்டம் வரைபின்போது கவனத்தில் எடுக்கப்படவேண்டியவை

**1)** 20வது திருத்தச்சட்ட வரைபின்போது, நிபுணர் குழு நாட்டின் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களை, விருப்பு வெறுப்புக்களைக் கருத்திலே எடுத்து சட்ட வரைபை மேற்கொள்வது இன்றியமையாததாகும். இன, மத, பாகுபாடின்றி அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைக்கப்பட்டு (intergration) அரசியலமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படல் வேண்டும். சகல தரப்பினரின் நலன்களும் கருத்திலெடுக்கப்படும் ஒரு திருத்தமே ஜனநாயகப் போக்கை உறுதிப்படுத்துவதும் சிறந்த அரசியல் பாரம்பரியத்தை நிலைநிறுத்துவதாகவும் அமையும்.

**2)** இந்த நாட்டின் அரசியல் பொருண்மை என்பது இனப்பிரிவு துருவ அரசியல் நிலைப்பாடாகும். இந்நிலைப்பாட்டின் அடித்தளம் இனமையவாதம் (ethnocentrism) ஆகும். இந்நிலைப்பாடானது விலகல் அல்லது நீக்க தேசியவாதத்திற்கு (exclusive nationalism) வலுச்சேர்த்துள்ளது. இந்நிலை மாறவேண்டுமாயின் விலகல் தேசியவாதத்திலிருந்தும் உள்வாங்கும் (inclusive) தேசியவாத நிலைப்பாட்டிற்கு நகரவேண்டும். உள்வாங்கும் தேசியவாதம் என்பது சமத்துவத்தை (equality based) அடிப்படையாகக் கொண்ட பன்மைத்தன்மையாகும் (Pluralism).

நல்லாட்சி அமைக்கும் எந்த

**அருட்பணி கி.ஜெயக்குமார்**

அரசும் அரசியலமைப்பில் மக்களுக்குச் சமமான உரிமைகள், சமமாக அனைவரையும் நடாத்துவது (equal treatement) சமமான பாதுகாப்பு, சமமான நீதி என்பவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும் அரசானது சமமான உரிமை, சமமான பாதுகாப்பு, சமமான நீதியை உறுதிப்படுத்தும் பொறிமுறைகளை அரசியல் யாப்பில் குறிப்பிட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும். இனங்களிடையே நம்பிக்கையை (Trust) ஏற்படுத்தச் சிறந்த அரசியல் கட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

**3)** நாட்டின் நீண்டகால இனப்பிரச்சினை தொடர்பான அரசியல் தீர்வுக்கு அரசியலமைப்பு உறுதிப்பாடே அடித்தளமாக அமைகின்றது. அடிப்படை மனித உரிமைகள், தனி மனித சுதந்திரம், இனமத பாகுபாடற்ற நிலை போன்றவற்றை அரசியலமைப்பினூடாகவே உறுதி செய்யப்பட வேண்டும். துரதிஸ்டவசமாக ஆவணி 20ம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றின் கன்னியமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி இந்நாட்டில் இனப்பிரச்சினை இருப்பதாகவே குறிப்பிடவில்லை.

இந்நிலைப்பாடானது அரசியலமைப்புத் திருத்தத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளடக்கப்படுமா என்ற வினா எழுந்துள்ளது. ஆனாலும் பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனைகளைக் கடந்து, புதிய திருத்தம் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்து சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்த முயலவேண்டும். இதுவே நீடிய சமாதானத்திற்கு வழிகோலும்.

**4)** 19வது திருத்தச்சட்டத்தால் நாடு, நாட்டின் ஜனநாயக மரபுகள் பேணப்பட்டது என்பதை யாரும் மறக்கமுடியாது. இத்திருத்தச்சட்டத்தால் பெறப்பட்ட நன்மைகளைத் தூக்கியெறிவது நாட்டின் எதிர்கால ஜனநாயகப் போக்கைப் பாதிக்கும். பல ஆணையங்கள் சுதந்திரமாகச் செயற்பட இத்திருத்தம் வழிகோலியிருந்தது.

கடந்த காலங்களில் தேர்தல் ஆணையம் எவ்வித அரசியல் தலையீடுமின்றிச் சுதந்திரமாகச் செயற்பட்டமை யாவரும் அறிந்ததே. சுதந்திரமான நிறுவனங்களின் அதிகாரங்களைக் குறைத்தல் என்பது ஜனநாயக விழுமியங்களைக் கேலி செய்வதாகும்.

எனவே புதிய அரசியல் திருத்தத்தில் 19வது திருத்தத்தால் நாட்டுக்கு நன்மை விளைவித்தவற்றை நீக்காது பேணி 20வது திருத்தத்தில் உள்வாங்கப்படல் வேண்டும். சுயாதீன ஆணைக் குழுக்களில் அரசியல் தலையீடற்ற செயற்பாடானது அரச இயந்திரங்களிலிருந்து பாகுபாடற்ற செயற்திறன்மிக்க சேவைகளை மக்கள் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்.

# தேவதைகளின் விரல்கள்

**அருட்பணி எஸ்.அஜந்தன்**



எல்லார் வீட்டு மூலையிலும் யாரோ ஒருவர் மீதான மன்னிக்க முடியாத கோபம், ஒரு அழுக்குத் துணி மூட்டையைப்போல தூசு படிந்தபடியே கிடக்கத்தானே செய்கிறது. அதைத் தூக்கி வெளியே போட யாருக்கும் மனம் வருவதே இல்லை.

பனை ஓலை பிய்ந்து தொங்கும் கிழுவை வேலிகளின் இடைவெளிகளில் பக்கத்து வீட்டுக்காரருடனான சண்டைகளில் அள்ளி இறைத்த அத்தனை அசிங்கமான வார்த்தைகளும் கண்ணுக்குள் விழுந்த மண்ணைப்போல காலமெல்லாம் கரகரத்துக் கொண்டுதானே இருக்கின்றன.

அந்த மனிதர்களைக் கடந்து போகும் தருணங்களிலெல்லாம் அந்தப் பழைய மண்துகள்கள் எறும்பைப்போல கால்கள் முளைத்து கண்முழுவதும் ஓடித்திருவதுபோல உண்டாகும் கடுகடுப்பு எவ்வளவு கொடூரமானது.

என் வாழ்வின் வெளிகளில் எதேச்சியாய் யாரோ ஒரு மனிதனைச் சுட்டிக்காட்டிக் கேட்டுப்பாருங்கள், சட்டைப் பைக்குள் மடித்து வைக்கப்பட்டிருக்கும் இரகசியக் கடிதத்தைப்போல யார் மீதோவான ஒரு பழைய கதையை மன்னிக்கவும், மறக்கவும் முடியாத அந்தக் கணத்தின் வலிகளை, அவமானங்களை, கொஞ்சம் ஈரக்கண்ணீர்த் துளிகளைச் சுமந்தபடியேதான் நடந்து கொண்டிருக்கிறான்.

அந்தக் கோபங்கள் ஒரு உலையைப்போல உள்ளே கொதித்துக் கொண்டே இருக்கின்றன. பழிவாங்குவதற்கான சந்தர்ப்பம் வரும்வரை. அவர்களின் பாரம் சுமத்தல் முடிந்து போவதே இல்லை.

ஒரு கேள்வி உள்ளே இருந்து உதைத்துக்கொண்டே இருக்கின்றது. வண்ணாத்துப் பூச்சிகளின் மெல்லிய இறக்கைகளில் ஏன் இத்தனை பெரிய விறகு மூட்டைகள்? இது எம் பறத்தலைப் பாளாக்குகிறதே. ஒரு புற்றுநோயைப் போல உள்ளே இருந்து அரித்து அரித்து எம் நிம்மதியைத் தின்று தீர்த்துக் கொண்டே இருக்கின்றதே.

இந்த இரகசியக் காயங்களுக்கு என்ன மருந்திட்டுக் கொள்ளுவது? கண்ணுக்குத் தெரியாத இந்தப் புண்ணுக்குள் மொய்க்கும் இலையான்களை எப்படி விரட்டுவது? இந்தச் சிலுவைகளை எந்தக் கல்வாரிகளில் இறக்கி வைப்பது?

இதோ ஒரு மயிலிறகு உங்கள் இதயத்தை வருடிக்கொள்ளுங்கள்!

**ஒரு கதை:** மஞ்சள் பூசிக்கிடந்த அந்த மாலை நேரத்துக் காதலர் பூங்கா, தேவதைகள் தவறவிட்ட பூப்போட்ட கைக்குட்டைபோல அழகாய் சிரித்துக் கிடக்கிறது.

வெட்கப் புன்னகையால் வார்த்தைகளை அடைகாக்கும் மௌனங்களால் ஈரக் கவிதைகளை ஒழுகவிட்டபடி அமர்ந்திருக்கும் காதலர்களால் நிறைந்து கிடக்கிறது. அந்தப் பூங்காவில் இருந்த காதல் ஜோடிகள் தம் வாழ்வின் அழகான தருணங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர்.

அந்தப் பூங்காவின் நடுவே ஒரு சிவப்பு றோஜாத் தோட்டம். வானத்தின் முகத்தில் நிலவை எடுத்துப் பொட்டு வைத்தது மாதிரி அழகாய் இருந்தது. அந்த றோஜாத் தோட்டத்தின் நடுவே ஆணும் பெண்ணுமாய் ஒரு காதல் ஜோடியின் சிலைகள் இருந்தன. அவை ஒன்றை ஒன்று ஆசையாக நெருங்கி வருவதுபோல நின்றுகொண்டிருந்தன.

என்ன அதிசயம்! ஒரு காற்றில் படபடக்கும் வெண்மை ஆடைகள் சூரியனாய்த் தகதகக்க, சிறகு முளைத்த ஒரு தேவதை பூங்காவில் தோன்றியது. பூங்காவைக் கண்களால் வட்டமிட்டது. தேவதை அதன் காலடியில் விழுந்து கிடந்த வெள்ளைப் பூக்களை மிதிக்காமல் விலகி நடந்தது. அதன் உள்ளங்கால்களும் வெள்ளைப் பூக்களைப் போலவே மென்மையாய் இருந்தன.

தேவதையின் பார்வை சட்டென்று ஓரிடத்தில் நிலைகுத்தி நின்றது. அந்தக் காதலர்கள் சிலைகளைத் தேவதை கண்டது. தேவதையின் மனம் தாயுள்ளமாய் தவித்தது.

"பாவம் அந்தக் காதலர் சிலைகள். அவை கல்லாய் இறுகிக் கிடக்கும் இரண்டு காதற் கனவுகள். இவைகளுக்கு எவ்வளவு ஆசைகள் இருக்கும்?"

உள்ளத்தில் ஒரு எண்ணம் உதித்தது தேவதைக்கு "இவைகளுக்கு உயிர்கொடுத்து வாழவிட்டால் இத்தனை ஆண்டுகளாய் சேர்த்து வைத்த ஆசைகளை, பாசத்தை, காதலை, கனவுகளை வைத்து எவ்வளவு வடிவான வாழ்க்கை வாழுவார்கள்?"

முடிவெடுத்தது தேவதை. தன் விரல்களால் சிலைகளைத் தொட்டது. ஆச்சரியம்! இதோ சிலைகள் இரண்டும் அழகான காதல் ஜோடிகளாய் வெட்கப் புன்னகையோடு கைகூப்பி நின்றார்கள்.

*(தொடர்ச்சி 11ம் பக்கம்)*

## காவலன் கலசம்

# அகதியாகப் புலம்பெயர்ந்தவர் எம் அடைக்கல அன்னை

அகதியாகப் புலம் பெயர்ந்தவர் "யோசேப்பு எழுந்து, குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு, இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டார். ஏரோது இறக்கும்வரை அங்கேயே இருந்தார்.. - மத் 2:14-15 இன்றைய மானிட சமூகம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று புலம்பெயர்ந்தோரின் அவலநிலை. புலம்பெயர்ந்து அகதிகளாக அல்லற்படுவோர் உலக அளவில் எத்தனை பேர் எனத் துல்லியமாக எவரும் கூற இயலாது. அவர்களின் எண்ணிக்கை பல இலட்சத்திலிருந்து ஓரிரு கோடிகள் வரை இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் ஊகம். அகதிகள் என்போர் எந்த ஒரு நாட்டிலும் குடியுரிமை அற்றவர்கள் அல்லது குடியுரிமை தங்களுக்கு இருந்தாலும் அந்த உரிமையுடன் தம் நாட்டில் வாழ இயலாமல் புலம் பெயர்ந்து, அந்நிய மண்ணில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள். இவ்வாறு மக்கள் புலம் பெயரக் காரணங்கள் பல. வறுமை,வேலையின்மை போர்கள், சமய இன மொழிக் கலவரங்கள் அல்லது பாகுபாடுகள், கொடுங்கோலாட்சி என்பன அவற்றுள் முக்கியமானவை.வரலாற்றின் எல்லாக் கால கட்டங்களிலும் புலம்பெயர்ந்தவர் பிரச்சினை இருந்துள்ளது. ஆனால் அண்மைக் காலங்களில் முன்பு இல்லாத வகையில் பாலஸ்தீன அகதிகள், வரட்சி அல்லது இனக் கலவரங்கள் காரணமாக ஆபிரிக்க நாடுகளில் புலம் பெயர்ந்தவர்கள், மேற்கு ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளுக்கு ஏனைய நாடுகளில் இருந்து உரிமம் இன்றி சென்றிருப்பவர்கள், இந்தியாவில் திபெத்திய அகதிகள், தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் என அவர்களின் வரிசை நீண்டுகொண்டே செல்கிறது. அகதிகளின் நிலை நம் பரிவிரக்கத்திற்கு மிகவும் உரியது. ஏனெனில், நாங்கள் நாட்டையும் வீட்டையும் மட்டுமல்ல, பெரிதும் தம் உடமைகளையும் விட்டுவிட்டே அவர்கள் புலம் பெயருகின்றனர். வாழ்வு ஆதாரங்கள் எதுவும் இன்றி அல்லது மிகக் குறைவானவற்றுடன் தான் அவர்கள் புதிய இடத்தில் தங்கள் வாழ்வை மீண்டும் தொடங்க வேண்டியிருக்கிறது. இந்நிலையில் தங்கள் வருங்காலம், பிள்ளைகளின் படிப்பு, வளர்ச்சி என்பவைபற்றிய கலக்கமுடனேயே அவர்கள் வாழுகின்றனர். அடுத்து, புதிய நாட்டில் அவர்கள் பழகிய உறவுகள் இன்றி அந்நியர்களாகவே வாழத் தொடங்குகின்றனர். அவற்றின் ஆதரவும் வழிகாட்டலும் இல்லாத நிலை கடினமானது என்றால், பலவேளைகளில் அவர்கள் அங்குள்ள குடிமக்களால் பகையாகவும் போட்டியாகவும் பார்க்கப்படும் நிலையும் இருப்பதுண்டு. மூன்றாவது, புலம்பெயர்ந்தோர் எளிதில் அரசு அதிகாரிகள், காவல் துறையினர், முதலாளிகள் என்போருடைய சுரண்டலுக்கும் ஆளாகின்றனர்.

விவிலியம் புலம்பெயர்ந்தோரின் நிலையை விளக்கிட்டுக் காட்டுவது மட்டுமின்றி, கடவுளை அவர்கள் சார்பானவராகவே சித்தரிக்கிறது. ஏனெனில், இறைவன் தேர்ந்துகொண்ட இஸ்ராயேல் மக்களின் குலமுன்னோராகக் காட்டப்படும் ஆபிரகாம் அவரது அழைப்பைக்கேட்டு, தமது நாட்டையும் வீட்டையும் விட்டு பாலஸ்தீன நாட்டில் அந்நியராக இருந்தவரே. இஸ்ராயேல் மக்களும்

> அகதிகளாக மரியாவும் யோசேப்பும் இயேசுவும் வாழ்ந்ததும் அகதிகளுக்கு இயல்பான அலைச்சல், அங்கலாய்ப்புகள், இன்னல், இடுக்கண்களைத் தாங்களும் அனுபவித்ததும் அகதிகள்பால் சமூகமும் ஆட்சியாளர்களும் நாமும் கொண்டிருக்கவேண்டிய அக்கறையை எடுத்துக் காட்டுகிறது.



> இதைத்தான் எபிரேயருக்கு எழுதப்பெற்ற திருமுகமும் அழகாக எடுத்துரைக்கிறது: "அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியது உண்டு" (எபி 13:2). 20

உரிமைகள் இன்றி எகிப்திய மண்ணில் அந்நிய நாட்டுக் கூலித் தொழிலாளர்களாகவும் கொத்தடிமைகளாகவும் இருந்தவர்களே. அவர்கள் அங்கிருந்து வெளியேறி பாலஸ்தீனப் பகுதியில் முதலில் அகதிகளாகவே வந்து சேருகின்றனர். தங்கள் பிற்கால வரலாற்றிலும் அவர்கள் அசீரிய நாடு கடத்தல் (கி.மு. 722), பபிலோனிய நாடு கடத்தல் (கி.மு. 586) என்பவற்றால் அந்நிய நாடுகளுக்கு அடிமைகளாகவும் அகதிகளாகவும் கொண்டு செல்லப்பட்டவர்களே. குழந்தை இயேசுவை ஏரோது கொல்லத் தேடியதால் அவரை இரவோடு இரவாகத் தூக்கிக்கொண்டு மரியாவும் அவர் கணவர் யோசேப்பும் எகிப்துக்குச் சென்று அங்கு சில ஆண்டுகள் அகதிகளாக வாழ்ந்தவர்களே.

இவ்வாறு, அகதிகளாக மரியாவும் யோசேப்பும் இயேசுவும் வாழ்ந்ததும் அகதிகளுக்கு இயல்பான அலைச்சல், அங்கலாய்ப்புகள், இன்னல், இடுக்கண்களைத் தாங்களும் அனுபவித்ததும் அகதிகள் பால் சமூகமும் ஆட்சியாளர்களும் நாமும் கொண்டிருக்கவேண்டிய அக்கறையை எடுத்துக் காட்டுகிறது. ஏனெனில், எகிப்தில் அவர்களைத் தங்கள் நடுவே ஏற்றுக்கொண்டவர்களும் தங்கள் வீடுகளில் அவர்களுக்குத் தங்க இடம் அளித்தவர்களும் அவர் களுக்கு எவ்வகையிலும் உதவி செய்த வேறு யூதர்களும் பிறவினத்தாரும் தாங்கள் அறியாமலேயே இறைமகனுக்கும் அவருடைய தாய்க்கும் தந்தைக்குமே உதவியிருக்கிறார்கள். இன்றும் நாம் அகதிகளுக்குச் செய்வதையெல்லாம் அவர்களுக்கே செய்கிறோம். ஏனெனில், "அன்னியனாய் இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்" (மத் 25:35), "... நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை " (மத் 25:43) என அவர் இறுதித் தீர்ப்பில் கூறுவது அகதிகளுக்கு நாம் செய்வதை வைத்துத்தான். இதைத்தான் எபிரேயருக்கு எழுதப்பெற்ற திருமுகமும் அழகாக எடுத்துரைக்கிறது: "அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியது உண்டு" (எபி 13:2). இது நம் நடுவில் உள்ள அகதிகளுக்கு மட்டுமல்ல, பிழைப்புக்காக வந்துள்ள அல்லது பாதுகாப்பு அற்று நம்மிடையே உள்ள பிற நாட்டினர், மாநிலத்தவர், பிற சமயத்தினர், மொழியினர், சாதியினர் அனைவருக்கும் பொருந்தும். அவர்கள் நலனில் நாம் அக்கறை காட்டுகிறோமா? நம் சமூகங்களில் சம உரிமை உள்ள உறுப்பினர்களாக அவர்களை நாம் ஏற்றுக்கொள்கிறோமா?

## முதல் நன்மைச் சிறார்களே!

## இவை உங்களுக்குத் தெரியுமா?



**நற்கருணை அருள் அடையாளம் 271. நற்கருணை என்றால் என்ன?**

நற்கருணை என்பது ஆண்டவர் இயேசுவின் உடல், இரத்தம் ஆகியவற்றின் பலியே ஆகும் தாம் மாட்சியோடு திரும்பி வரும்வரை, தமது சிலுவைப் பலியை எல்லாக் காலங்களிலும் நின்று நிலவச் செய்ய அவரே அதை ஏற்படுத்தினார். இவ்வாறு தம் இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றை நினைவு கூர்ந்து கொண்டாடுவதைத் தம் திருச்சபையிடம் ஒப்படைத்தார். இது ஒற்றுமையின் அடையாளம் அன்பின் பிணைப்பு, பாஸ்கா விருந்து ஆகும் இதில் கிறிஸ்து உண்ணப்படுகிறார் அகம் அருளால் நிரப்பப்படுகிறத் வரவிருக்கும் மாட்சிமையின் உறுதிப்பாடு நமக்கு அளிக்கப்படுகிறது.

**திருச்சபை வாழ்வில் நற்கருணை எதைக் குறித்துக் காட்டுகிறது?**

நற்கருணை கிறிஸ்தவ வாழ்வு முழுவதற்கும் ஊற்றாகவும் சிகரமாகவும் உள்ளது இதில் கடவுளின் மீட்புச் செயலும் அவருக்கு நாம் செலுத்தும் வழிபாடும் உச்ச நிலையை அடைகின்றன. இது திருச்சபையின் முழு ஆன்மீக நலனும் நமது பாஸ்காவும் ஆகிய கிறிஸ்துவை உள்ளடக்கியது. நற்கருணை வழியாக இறைவனோடு நாம் கொண்டுள்ள உறவும், இறை மக்களின் ஒற்றுமையும் வெளிப்படுத்தப்பட்டு விளைவிக்கப்படுகின்றன. நற்கருணைக் கொண்டாட்டத்தின்வழியாக இப்போதே நாம் விண்ணகத் திரு வழிபாட்டோடு இணைக்கப்படுகிறோம் நிலை வாழ்வின் முன்சுவையைப் பெறுகிறோம்.

**நற்கருணை உட்கொள்ளத் தேவையான தகுதிகள் யாவை?**

நற்கருணை உட்கொள்ள ஒருவர் கத்தோலிக்க (1385-132) திருஅவையோடு முழுமையான நல்லுறவு கொண்டிருக்க (1415) வேண்டும் மேலும் அவர் அருள் நிலையில் இருக்கவேண்டும் அதாவது சாவான பாவ நிலையில் இருக்கக் கூடாது. சாவான பாவம் செய்ததாக உணர்கிற எவரும், நற்கருணை உட்கொள்ளுமுன் ஒப்புரவு அருள் அடையாளத்தைக் கட்டாயம் பெறவேண்டும்.

மேலும் மனத்தை ஒருமுகப்படுத்துதல், இறைவேண்டல் செய்தல், திரு அவையின் நோன்பு விதிகளைக் கடைப்பிடித்தல், கிறிஸ்துவை மதிக்கும் அடையாளமாகத் திகழும் பொருத்தமான உடல் பாங்கு கள் (செய்கைகள், உடைகள்) ஆகியவை நற்கருணை உட்கொள்வோருக்குத் தேவையான தகுதிகள் ஆகும்.


## விண்ணேற்பு அன்னை சபையில் துறுவற வாழ்வில் நித்திய அர்ப்பணம்



AD 37

### அருட்சகோதரி தெயோனிஷா

யாழ் மறை மாவட்டத்தின் நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தைச் சேர்நத, காலம் சென்றவர்களான திரு. க. அந்தோனிப்பிள்ளை(அதிபர்) திருமதி. அ.மதலேனம்மா, திரு. ம.அந்தோனி, திருமதி. அ. அந்தோனியாப்பிள்ளை ஆகியோரின் பேத்தியும், திரு.அ. மரியசெல்வநாயகம், திருமதி. ம. செ. மேரி நிர்மலா அவர்களின் ஏக புத்திரியும் ஆன, விண்ணேற்பு அன்னை துறவற சபையின் அருட்சகோதரி தெயோனிஷா அவர்களின் நிரந்தர வார்த்தைப்பாடு வழங்கும் நிகழ்வு பிரான்சில் 05.09.2020 அன்று நடைபெற்றது.

இறைபணிக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் அருட்சகோதரி தெயோனிஷாவுக்காக நன்றி கூறும் நாம், தான் தேர்ந்து கொண்ட துறவற வாழ்வில் நிலைத்திருந்து, பிரமாணிக்கமாக இயேசுவின் இறையாட்சிப்பணியில் உடல், உள ஆரோக்கியத்துடன் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
திரு-திருமதி. அருட்பிரகாசம் குடும்பம்
திரு. திருமதி. அ. இ. ஜெயரட்ணம் குடும்பம்
திரு-திருமதி. ச. தவநேசன் நிலாந்தினி குடும்பம்
160/1,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்



## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

மண்ணில் 29 • 09 • 1938



விண்ணில் 12 • 08 • 2020

அமரர்

### கலாபூஷணம் புலவர் A.W. அரியநாயகம் J.P

அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ்-புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் 11.09.2020 (வெள்ளிக்கிழமை) காலை 11.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் ஆன்ம சாந்தித் திருப்பலியில் கலந்து செபிக்குமாறும் தொடர்ந்து ஆலய வளாக ஜெறோம் மண்டபத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

AD 37

இல-100, 4ஆம்
குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்


## அடைக்கல அன்னை

அடைக்கலம் தந்தே அணைத்திடும் சோலை
அருட்கொடை பொழிந்திடும் கருக்கொண்டமேகம்
படைக்கணம் அழித்திடும் படைக்கலப் பேழை
பரமனின் திருவடி இணைத்திடும் பாலம்

பாவியர் அலறியே கூவிடும் தருணம்
பரிவுடன் உருகிடும் கருணையின் ஊற்று
பூவிலும் வானிலும் தூயபே ரின்பம்
பொங்கிடத் தந்திடும் பரிமளத் தென்றல்
தாழ்ச்சியின் போதகம் தருங்கலைக் கூடம்
சாந்த மணிப்புற சத்தியக் கோயில்
வீழ்ச்சியின் விடுதலை விண்புகும் வாயில்
விலைமதிக் கரியதோர் கற்புச் சுரங்கம்

காவியம் கண்டிடாக் காட்சியின் திலகம்
கன்னியர் உலகிலோர் பொன்நிலா லீலி
ஓவியம் கனிந்திடச் சென்மித்த புனிதம்
செப்புதற் கடங்கிடாப் புண்ணியச் செம்பு

- யாழ்-ஜெயம்

# கொழும்பு உயர் மறைமாவட்ட புதிய துணை ஆயர் அன்ரன் றஞ்சித் ஆண்டகையின் வாழ்வில் இறைவனின் அருட்கரம்




யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மைக்கல் அன்ரனி பிள்ளைநாயகம், மிரியம் தர்மா ஆகியோரின் அன்புப் புதல்வனாக அன்ரன் றஞ்சித் 23ம்திகதி புரட்டாதி மாதம் 1966ம் ஆண்டு கரம்பனில் பிறந்தார்.

அவர் யாழ்ப்பாணத்திலுள்ள தங்கள் பங்குக்கோவிலான புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்றார்.

தந்தை கொழும்பு மத்திய வங்கியில் சேவையாற்றியதால் 1973ம் ஆண்டில் கொட்டாஞ்சேனையில் வாழச் சென்றார்கள். இரட்டையரான அன்ரன் றஞ்சித்தும் அஜித்தும் மிகவும் சிறுவர்களாக இருந்த போதே அவர்களது தந்தை காலமானார். அதனைத் தொடர்ந்து, மீண்டும் யாழ் நகரில் வாழ 1974ம் ஆண்டில் திரும்பி வந்தனர். தாயார் நிறைந்த அன்போடு, எதுவித குறையுமில்லாமல், அவர்களைப் பராமரித்ததால் தந்தையார் இல்லையே என்ற நிலை அவர்களைப் பெரிதும் பாதிக்காமல் இருந்தது எனலாம்.

யாழ் அடைக்கல அன்னை ஆலயத்திலே திருமுழுக்குப் பெற்ற நிலையில், புனித கன்னிமரியாள் மட்டில் சிறு வயதில் இருந்தே மிகுந்த பற்றுக்கொண்டவராக அன்ரன் றஞ்சித் வளர்ந்து வந்தார். குறிப்பாக தினமும் மாலை வேளைகளில் செபிக்கின்ற பயிற்சியை கொடுப்பதில் அவரது தாயும் அம்மம்மாவும் முக்கிய பங்கு வகித்திருந்தனர். ஒவ்வொரு நாளும் நடைபெறும் திருப்பலிக்குத் தவறாமல் சமூகம் அளிக்கவும், பீடப்பணியாளராகத் திருப்பலிக்கு உதவவும், சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்த திருக்குடும்பக் கன்னியர் மடத்தை நன்றியுடன் அவர் நினைவு கூருவது குறிப்பிடத்தக்கது. யாழ் திரும்பிய பின் புனித பத்திரிசியார் கல்லூரியில் 1974ம் ஆண்டு 2ம் வகுப்பிலே இணைந்து, கல்வியில் சிறந்த கவனம் செலுத்தி, தொடர்ச்சியாகக் கற்று வந்தார். 1985ம் ஆண்டில் க.பொ.த உயர் தரப் பரீட்சையை நிறைவு செய்த நிலையில், தான் நெடுநாளாக செபத்தில் வளர்த்து வந்த குருவாகத் தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்ற ஆசையை அப்போது அடைக்கல அன்னை ஆலயப் பங்குத்தந்தையாக இருந்த அமரர். யோசப் அருமைநாயகம் அடிகளிடம் தெரிவித்து, ஆயர் அமரர். அதி.வணக்கத்திற்குரிய தியோகுப்பிள்ளை ஆண்டகையின் அனுமதியோடு அப்போது இருந்த பெரிய குருமட அதிபர் பிலிப் பொன்னையா அடிகளாரின் ஊக்குவிப்பின் காரணமாகவும், நேரடியாகவே புனித சவேரியார் பெரிய குருத்துவக் கல்லூரியில் மாணவனாக 1985ம ஆண்டில் இணைந்து கொண்டது இறைவனுடைய இரக்கமாகும். சாதாரணமாக க.பொ.த உயர் தரம் படித்து முடித்த மாணவர்கள் கூட சிறிய குருமடம் சென்றுதான், பின்னர் பெரிய குருமடத்திற்கு அனுப்பப்படுவது வழக்கம். மாணவன் அன்ரன் றஞ்சித்துடைய விடயத்தில் பழுத்த அனுபவசாலியான பிலிப் பொன்னையா அடிகளாரின் முயற்சியால்தான், இந்த நன்மையான முடிவு ஆயர் அவர்களால் எட்டப்பட்டது என்று கருதுகின்றேன். யாழ் ஆயர் அவரை குருமாணவனாக ஏற்றுக்கொண்ட நிலையில், தாமதமின்றி பெரிய குரு மட ஆங்கிலமொழி தகுதிகாண் பரீட்சையில் நல்ல சித்திபெற்று நேரடியாகவே செப்ரெம்பர் 23ம் திகதி 1985ம் ஆண்டில் யாழ் புனித சவேரியார் குருமடத்தில் இணைந்தார்.

குருமடத்தில் அவர் மெய்யியல் படித்துக்கொண்டு இருக்கும்போது ஏற்பட்ட நிகழ்வுகள் முக்கியமானவை. மாணவன் அன்ரன் றஞ்சித் அவர்களுக்கு கணிதத் துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ள பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. குருமட மாணவனாக இருந்துகொண்டு, குருத்துவக் கல்விப் பயிற்சியை தற்காலிகமாக இடைநிறுத்தி, பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பை முடித்து விட்டு, மீண்டும் குருத்துவ மெய்யியல் கல்வியை தொடரக் கூடாதா? என்ற முக்கியமான கேள்வி எழுந்திருக்கின்ற நிலையில், ஆயர் அவர்களை அணுகி, இதைப்பற்றிக் கேட்ட போது, "அவ்வாறு இடைநிறுத்திச் செல்ல வேண்டாம்" என்ற பதில் கிடைத்தது. இதற்குரிய முக்கிய காரணங்களில் ஒன்றாக, யாழில் அப்போது இருந்த பாதுகாப்பற்ற நிலையும் குறிப்பிடத்தக்கது. மனதிற்குப் பாரமாக இருந்தாலும் ஆயருடைய சொல்லுக்கு கீழ்ப் படிந்து தன்னுடைய பல்கலைக்கழக அனுமதியை முற்றாக நிறுத்தி விடச் சென்றார். அங்கு சென்றபோது அதை முற்றாக நிறுத்தாமல் பிற்போடுவதற்கு அமதி கேட்கலாம் என்ற ஆலோசனை கிடைக்கவே பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிற்கு விண்ணப்பக்கடிதம் எழுதி அந்த அனுமதியைப் பெற்றுக் கொண்டார்.

புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியில் மெய்யியல் கல்வியை 1988ம் ஆண்டு வரை தொடர்ந்து அதை நிறைவு செய்த பின் யாழ் பல்கலைக்கழகத்தில் இணைந்து கணிதவியல், புள்ளிவிபரவியல், துறைகள் இணைந்த, இளமாணி

**அருட்திருகலாநிதி. மைக்கல் சவுந்தரநாயகம்**

பட்டத்தில் சிறப்புத்தேர்ச்சியைப் பெற்றுத் தொடர்ந்து விரிவுரையாளராகவும் நியமனம் பெற்று 1994ம் ஆண்டு வரை அங்கு கற்பித்தார்.

இதற்கிடையில் அவருடைய இரட்டையரான சகோதரன் அஜித் கொழும்பில் வேலை செய்து வாழும் நிலையில், 1995ம் ஆண்டில் பாப்பிறை புனித ஜோண் போல் அவர்களின் இலங்கை வருகையையொட்டி இவரும் தன் தாயாரோடு கொழும்பு சென்று ஒரு சிறிய வாடகை வீட்டில் வாழ ஆரம்பித்தார்கள். இறைவனுக்கு தன்னை அர்ப்பணித்து குருவாகப் பணியாற்ற வேண்டும் என்ற ஆவல் மேலிட வெளிநாட்டில் வேலைவாய்ப்புக்களுக்குரிய சந்தர்ப்பங்களை தேடுவதை நிறுத்திவிட்டு, கொழும்பு பேராயர் அமரர்.நீக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ அவர்களை சந்திக்கச் சென்றார். அவர் இன்முகத்துடன் இவரை வரவேற்று இதயத்தால் அவருக்கு செவிமடுத்து உரையாடினார். கொழும்பு உயர் மறை மாவட்டத்தில் சேர்ந்து பணிபுரிய வேண்டுமென்றால் சிங்கள மொழியிலும் எழுத, வாசிக்க, பேச தயார் நிலையில் இருத்தல் வேண்டும் என்று கூறி இதற்கு அவரே உதவியாக இருந்தார். பொறளை புனித அலோசியஸ் சிறிய குருமடத்தில் 1995ம் ஆண்டில் சில மாதங்கள் தங்கியிருந்து சிங்கள மொழியைப் படிக்க ஒழுங்கு செய்தார். மிகவும் இளைய மாணவர்களோடு இருந்து சிங்கள மொழியை மிகுந்த ஊக்கத்தோடு கற்றதினால் சிறிய குருமட அதிபர் நல்ல முறையில் அவரை சிபாரிசு செய்ய பேராயர் அமரர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ ஆண்டகை அவர்கள் கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு என்று இவரை ஏற்றுக்கொண்டார்.

பின்னர், கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் 4வருட இறையியல் கல்வியை திறம்பட நிறைவு செய்து அதேபேராயரினால் புனித லூசியா போராலயத்தில் 2000ம் ஆண்டு புரட்டாதி 16ம் திகதி குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். அவருடைய 20 வருட குருத்துவ வாழ்வில் பெரும் பகுதியை கல்வித்துறை பணியில் செலவிட்டார். கொழும்பு சென்.பீற்றர் கல்லூரி, சென்.ஜோசப் கல்லூரிகளில் தனது கல்விப் பணிகளைத் தொடர்ந்து கொழும்பு புனித யோசேவாஸ் இறையியல் கல்லூரி தமிழ் பிரிவுக்கு இணைப்பாளராக 2006ம் ஆண்டில் இருந்து 2011ம் ஆண்டு வரை பணியாற்றி அதேவேளையில் 2008ம் ஆண்டு சென் பீற்றர் கல்லூரி உபஅதிபராகவும், தொடர்ந்து 2014ம் ஆண்டு சென் யோசப் கல்லூரி உப அதிபராகவும் பணியாற்றினார்.


இக்காலப்பகுதியில் (2005) முதுகலைமாணிப்பட்டத்தை இலண்டனில் வெற்றிகரமாக நிறைவுசெய்தார். மேலும் ஆயர் அவர்கள் தமது முதுகலைமாணிப் பட்டத்தை யாழ் பல்கலைக்கழகத்தில் 2017 ஆம் ஆண்டு நிறைவு செய்தார். 2019ம் ஆண்டில் மொரட்டுவை புனித செபஸ்தியன் கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டார். அவ்வாறு பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் 2020 ஆடி 13ல் கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு துணை ஆயராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டு ஆவணி 29ஆம் திகதி துணை ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

## ஆயரின் இலச்சினையிலிருந்து அவரைப்பற்றிய சில சிந்தனைகள்

தன் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்த யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி மட்டில் அவர் கொண்டிருக்கும் பற்றும் நன்றியுணர்வும் அவருடைய இலச்சினையில் வெளிப்படுத்தப்படுகின்றது. அதன் அடிப்படை அமைப்பு புனித பத்திரிசியார் கல்லூரியின் இலச்சினையை மிகவும் நெருங்கி ஒத்திருப்பதாக அமைந்திருக்கின்றது. அதனுள் காணப்படும் சாம்றொக் இலை புனித பத்திரிசியாரை நினைவுபடுத்துகின்றது. அதன் உள் வடிவத்தில் இணைந்து காணப்படும் A.M ஆகிய எழுத்துக்கள் புனிதமிக்க கன்னிமரியாளைக் குறிக்கின்ற. "ஆவே மரியா" என்ற சொற்களின் முதல் எழுத்துக்கள் ஆகும். உள்ளே இடதுபக்கத்தில் உள்ள யாழின் வடிவம், தன் சொந்த மண்ணாகிய யாழ்ப்பாணத்தைக் குறிக்கின்றது. நாவல் நிற முக்கோணத்தில் உள்ள லீலி மலர், புனித சூசையப்பரின் கோலில், புனிதமிக்க கன்னிமரியாவை மண ஒப்பந்தத்துக்கு முன் அவர் சந்தித்தபோது, லீலி மலர் மலர்ந்ததைக் காட்டுகின்றது. அந்தத் திருமண உறவுக்கு இறைவன் தாமே, புனித சூசையப்பரை தெரிந்தெடுத்து, அழைத்திருக்கின்றார் என்பதை அது சுட்டிக்காட்டுகின்றது. அழைத்தல் இறைவனிடமிருந்தே வருகின்ற தெரிவு, என்பது முதன்மையானதாகவும், அதற்குப் பதிலிறுத்தல் இரண்டாவது நிலையில் உள்ளதும், அழைப்பைப் பெறுபவரை பொறுத்ததுமாகும், என்ற உண்மைகளை வெளிப்படுத்துவதாகவும் இது அமைகின்றது.

மண் நிறமான மற்றைய முக்கோணமும், அதில் வைக்கப்பட்டுள்ள லீலி மலரும், அவருடைய பெயர் கொண்ட பாதுகாவலர் புனித அந்தோனியாரைக் குறிக்கும். லீலிமலர் புனித அந்தோனியாரின் கற்புத்தூய்மையையும் சாத்தானுக்கு எதிரான அவருடைய வாழ்நாள் போராட்டத்தையும் நினைவுபடுத்தி நிற்கின்றது.

நடுவில் உள்ள பச்சை நிறமான வைரவடிவம், ஓர் அக்கினி நாவையும் அதன்கீழ் ஒரு கைக்கோடரி போன்ற



Halberd ஆயுதத்தையும் கொண்டுள்ளது. இவைமுறையே பெந்தக்கோஸ்தே நாளில் புனித யூதா பெற்ற தூய் ஆவியான வரையும், பாரம்பரியம்படி பாரசீக நாட்டிலே இரத்த சாட்சியாக அவர் கொல்லப்பட்டதையும் குறிக்கும். இயேசுவின் அன்புக்காகத் தன் உயிரையும் அர்ப்பணிக்க ஆயரின் தயார் நிலையையும் இது சுட்டிக்காட்டுகின்றது கம்பகா பகுதியைசேர்ந்த இந்திக்கொல்லவில் உள்ள புனித யூதாவின் திருத்தலத்தைக் கிரமமாகத் தரிசித்து ஜெபிப்பது, நம் புதிய ஆயரின் வழக்கம் என்பதையும், இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இலச்சினையின் வெளிப்புறமாக இருமருங்கும் சமமாக வரையப்பட்டிருக்கின்ற செந்நிறச்சுவாலை, ஆயராக அருட்பொழிவு நடைபெறும்போது புதிதாய் பொழியப்படும் தூய ஆவியானவரின் வல்லமையையும், ஆயர் பணிக்கு அவசியமான உண்மையின் அன்பின் ஆவியையும் குறிக்கும். தான் குருவாகத்திருநிலைப்படுத்தப்பட்ட யூபிலி ஆண்டாகிய 2000ம் ஆண்டைக் குறிக்க, கொழும்பு உயர் மறை மாவட்டத்திற்கான ஜூபிலி சின்னமாகிய தேவத்தை லங்கா மாதா அதிபேராலயத்தின் குவிமாடமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

புதிய ஆயர் அன்ரன் றஞ்சித் தன் விருது வாக்காக லத்தீன் மொழியில் DOMINUS EST "அவர் ஆண்டவர் தாம்" என்ற சொற்தொடரைத் தேர்ந்தெடுத்துள்ளார். அது யோவான் 21:7 ல் உள்ளது. "ஆண்டவர் தாமே" என்று அது சுருக்கமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. புதிய ஆயரின் வாழ்க்கை அனுபவத்தை, நன்கு உள்ளடக்கிய சொற்தொடர் அது. தன் வாழ்க்கை முழுவதும், தவறாமல் சிறு பராயம் தொட்டு ஆலயத்திற்குச் சென்று ஆண்டவரை சந்திப்பவராக வாழ்ந்தவர், அவர். அவருடைய வாழ்வில் துன்பமான, இதயத்திற்கு பாரமான சந்தர்ப்பங்களைக் கடந்து சென்று இருக்கின்றார். குருமட மெய்யியல் பயிற்சியை முடித்து பல்கலைக்கழகத்தில் இணைந்த கட்டம், பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மத்தியில் கொழும்பு நோக்கிய பயணம், சிங்கள மொழியை விரைவில் கற்க வேண்டிய நிலை, கடினமான கல்வித்துறை பணியில் ஈடுபடுதல் போன்ற கட்டங்களில் எல்லாம் இறைவன் தாமே பிரசன்னமாக இருந்து தன்னை அழைத்து வழிநடத்தினார் என்பதை அந்த நேரங்களில் முழுமையாக உணரா விட்டாலும் அவற்றைக் கடந்து செல்கின்ற கட்டங்களில் தன்னோடு இருந்தவர் "ஆண்டவர் தாமே" என்பதை ஆழமாக அனுபவித்ததன்விளைவாகவே இந்த சொற்தொடரை தன் விருது வாக்காக தெரிந்தெடுத்திருக்கின்றார் என்பதில் ஐயமில்லை. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

# தேசிய மறைக்கல்வி தினம் - 20.09.2020

## மறைமாவட்ட இயக்குநரின் செய்தி



வழமை போல் இவ்வாண்டும் மறைக்கல்வி தினம் - மறைக்கல்வி வாரம் - மறைக்கல்வி விழா என்பன இடம்பெற உள்ளன. ஆலய ஆண்டுவிழா கொண்டாடுவது போல சுழற்சி முறையில் இவையும் வந்து போகின்றன. இதைப் பற்றிய ஓர் மீள் மதிப்பீடு செய்வது அவசியமானதாக உள்ளது.

மறைக்கல்வி பற்றி மக்களிடம் காணப்படும் மனப்பாங்கு கவனத்தில் கொள்ளப்படுதல் பயனுள்ளதாகும்.

மறைக்கல்வி வகுப்புகள் சிறுவர்களுக்கானதே. செபங்களைப் பாடமாக்கினால் போதுமானது. மறைக்கல்வி பாடத்தை விட ஏனைய பாடங்கள் முக்கியமானவை. அவற்றில் சித்திபெற பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்வது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது போன்ற கருத்துக்கள் பெற்றோரிடம் காணப்படுகின்றன.

கல்வி மனித வாழ்வுக்கு இன்றியமையாதது. பட்டங்கள் பதவிகள் பெற்றுபொருளாதாரத்தில்வளர்ச்சியடைய உலகியல் சார்புக் கல்வி தேவையானது. ஆனால் அவை மட்டும் மகிழ்சிகரமான வாழ்வுக்குப் போதுமானவையல்ல. வாழ்வில் ஒழுக்கம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த கல்வியும் இன்றியமையாததே. இன்றைய சமூகத்தில் காணப்படும் கடவுள் நம்பிக்கையற்ற போக்குகள், குடும்பங்களில் பரஸ்பர உறவின்மை, ஒழுக்கக்கேடுகள், போதைப்பொருள் பாவனை, சண்டை சச்சரவுகள், பயங்கர சூழ்நிலைகள் இருப்பதற்கு அடிப்படைக் காரணங்கள் சுயநலப் போக்குகளும் பிறர் நலம் பேணாததுமே எனக் கூறலாம். படித்தவர்கள், உயர்பதவியில் உள்ளவர்கள் கல்விமான்கள் மத்தியிலும் மேற்கூறப்பட்ட மனப்பாங்குகள் காணப்படுகின்றன.

உலகில் காணப்படும் படைப்புகளில் மனிதன் மேன்மையானவன். ஏனைய படைப்புக்கள் அனைத்தும் மனிதனுக்கானவையே. மனிதனே அவற்றை ஆட்சி செய்கின்றான். அவனது மனப்போக்குகள், அபிலாசைகளுக்கேற்ப செயற்படுகின்றான்.

மனிதன் தான் இருப்பதற்குக் காரணம் தான் அல்ல. தன்னைப் படைத்த இறைவனே. எனவே அவரது எதிர்பார்ப்பிற்கு ஏற்ப வாழ்வதே மேன்மையானது. எனவே இவ்வுலகில் தான் வாழ்வதன் நோக்கத்தை அறிதல், தான் வாழும் குடும்பத்தில் தனக்குரிய இடம் என்ன என்றும் ஏனைய மனிதருக்கும் தனக்கும் உள்ள உறவு நிலை என்ன என்றும் படைப்புகள் மட்டில் தான் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் எனறும் இறைவனின் திட்டம் என்ன என்று அறிந்துகொள்வதும் அத்திட்டத்தை ஏற்றுக் கொள்வதும் கடவுளில் நம்பிக்கை வைத்து வாழ்வதற்கும் மறைக்கல்வி கட்டாயக் கல்வியாக இருக்கின்றது.

ஆகவே மறைத்தூதுப்பணியான மறைக்கல்விப் பணி மட்டில் கூடிய கவனம் செலுத்த வேண்டியது பெற்றோர், குருக்கள், துறவிகள், ஆலய அருட்பணி சபை உறுப்பினர்கள், பங்குமக்கள், ஆசிரியர்கள், மறை ஆசிரியர்கள் ஒவ்வொருவரினதும் முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும். உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள் என்று கூறிய இயேசுவின் மேன்மையான பணியை அன்புடனும் நம்பிக்கையுடனும் கற்பிக்க முன்வருவோம். திருமுழுக்கின் மூலம் நாம் அனைவரும் மறைத் தூதுப் பணியாளராகும் வரத்தைப் பெற்றுள்ளோம். இதனால் உயிர்த்த இயேசுவிற்கு செயற்பாடுடைய நம்பிக்கையாளராக சான்று பகர்வோம். இறுதியாக மறைக்கல்விப் பணியில் தம்மை அர்ப்பணித்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து பங்குத்தந்தையர்கள். துறவிகள். மறை. ஆசிரியர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**"மறைத்தூதுப்**
**பணியான மறைக்கல்வியை**
**நோக்கிப் பயணிப்போம்"**

*அருட்பணி . X.W. ஜேம்ஸ்*
*இயக்குநர்*
*யாழ். மறைக்கல்வி நடுநிலையம்*

**01. திருவிவிலிய மறைக்கல்வி வாரம்:**

திருவிவிலிய மறைக்கல்வி வாரம் செப்ரெம்பர் 13ம் திகதி ஆரம்பமாகும். இவ்வாரத்தில் பங்குகளில் மறைக் கல்வி மாணவர்கள் மத்தியில் போட்டிகள், சிறப்பு நிகழ்வுகளை நடாத்தவும். திருவிவிலிய மறைக்கல்வி தினம் செம்ரெம்பர் 20ம் திகதி கொண்டாடப்படும்.

**02. மறை ஆசிரியர் தேசியத் தேர்வு:**

இத்தேர்வு நவம்பர் மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்பதை தேசிய மறைக்கல்வி இயக்குநர் அறிவித்துள்ளார்.

**03. திருமறைக் கல்வித் தேர்வு:**

இத் தேர்வானது பாடசாலைகளில் நவம்பர் மாதம் 28ம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

# எந்த மாஸ்க் நல்லது?



**இந்த கோவிட் காலத்தில் எதற்காக மாஸ்க் அணிகிறோம்? 'இதெல்லாம் ஒரு கேள்வியா? கொரோனாக் கிருமிகளிடமிருந்து என்னைப் பாதுகாத்துக் கொள்ளத்தான்' என்று நீங்கள் பதிலளித்தால் அது ஓரளவுக்குத்தான் சரி. கொரோனாக் கிருமிகள் நம்மிடமிருந்து பிறருக்குத் தொற்றாமல் இருப்பதுதான் மாஸ்க் அணிவதன் முக்கிய நோக்கம். (அப்படியானால் நமக்கு கோவிட் நோய் வந்தால் மட்டுமே மாஸ்க் அணிந்தால் போதாதா என்று கேட்கக் கூடாது. நம் உடலில் நோய்க் கிருமிகள் உட்புகுந்து அவற்றின் அறிகுறிகள் தென்படாத நிலையிலேயே அவை பிறருக்குப் பரவலாம்). ஆக மாஸ்க் அணிவது ஒரு சமூக சேவை - அல்லது சமூகக் கடமை.**

பலவிதமான மாஸ்க்குகள் உள்ளனவே, அவற்றில் எது சிறந்தது? இதை அறிய வேண்டுமானால் மாஸ்க் அணிவதன் முக்கிய நோக்கங்களை அறிய வேண்டும். இருமல் மற்றும் தும்மல் மூலமாக வெளிப்படும் பெரிய அளவினாலான நீர்த்துளிகள் பிறருக்குப் பரவாமல் அந்த மாஸ்க் தடுக்க வேண்டும். தவிர நாம் பேசும்போதும் மூச்சுவிடும் போதும் மிகச் சிறிய துகள்கள் காற்றில் பரவும் (இவற்றை 'ஏரசால்கள்' என்பார்கள்). அவற்றையும் இந்த மாஸ்க் தடுக்க வேண்டும். இந்த இரண்டையும் சரிவரச் செய்ய முடிந்த மாஸ்க்தான் சிறந்தது. மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், சீனியர் குடிமக்கள், பிற நோய்களால் அவதிப்படுபவர்கள் போன்றவர்களுக்கு சிறப்பு மாஸ்க்குகள் அவசியம். உலக சுகாதார நிறுவனம் இவர்கள் தகுந்த பெரும் பலனளிக்கும் மாஸ்க்குகளை அணிய வேண்டும் என்கிறது. எந்த மாஸ்க்கை அணிவது நல்லது?

N99 and N95 ஆகியவை மருத்துவ மாஸ்க்குகளில் மிகச் சிறப்பானவை. கொரோனாக் கிருமிகள் நிறைந்த சூழலில் 20 நிமிடங்கள் தொடர்ந்து இருந்தால் கூட N99 மாஸ்க்கை அணிபவர்கள் கோவிட் நோயால் பாதிக்கப்படும் வாய்ப்பு 95 முதல் 99 சதவிகிதம் வரை குறைக்கப்படுகிறது என்கின்றன ஆராய்ச்சி முடிவுகள்.

உங்கள் முகத்தை நோக்கி வரும் கிருமிகள் அடங்கிய சிறு துகள்கள் மற்றும் திரவங்களை 95 சதவிகிதம் தடுப்பதால்தான் N95 மாஸ்க்குக்கு அந்தப் பெயர். N95 மாஸ்க் அணியும்போது சுவாசிப்பதில் சிறிது சிரமம் உண்டாகலாம் என்பதால் ஏற்கெனவே சுவாசப் பிரச்னைகள் உள்ளவர்கள் மருத்துவ ஆலோசனை பெற்ற பிறகு இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

மருத்துவ மாஸ்க்கை ஒரு முறைக்கு மேல் பயன்படுத்தக்கூடாது. ஆனால் மேற்படி மாஸ்க்குகள் குறைந்த அளவிலேயே கிடைக்கும்போது அவற்றை மருத்துவ மற்றும் துப்புரவுத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு ஒதுக்குவது தான் நியாயம். தவிர முகத்தில் நிறைய முடி வளர்த்திருப்பவர்களுக்கு இந்த வகை மாஸ்க்குகள் ஏற்றவை அல்ல. மேற்படி மாஸ்க்குகள் கிடைக்காதபோது 'சர்ஜிகல் மாஸ்க் என்பதை மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தலாம். பெரிய அளவு கொண்ட நீர்த் துகள்கள், காற்றில் பரவும் சிறிய துகள்கள் ஆகிய இரண்டையுமே பெருமளவு இது தடுப்பதால் கொரோனா பரவலைத் தடுப்பதிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது.

சர்ஜிகல் மாஸ்க் என்பது முகத்தைப் பெரிதும் இறுக்குவதில்லை . ஒருமுறை 'மட்டுமே இதைப் பயன்படுத்த முடியும். வால்வுகளைக் கொண்ட மாஸ்க் திறன் கொண்டது என்பதோடு அதை அணியும் போது சுவாசிப்பதும் எளிதாக இருக்கிறது என்பதால் கணிசமானவர்கள் இதை அணிவதுண்டு. ஆனால் இது இப்போது பல நாடுகளில் தடை செய்யப்பட்டுவிட்டது. காரணம் அணிபவருக்கு இது பாதுகாப்பு அளித்தாலும் வடிகட்டப்படாத காற்றை இது வெளியேற்றுவதால் சுற்றி இருப்பவர்களுக்கு இது பாதுகாப்பு அளிப்பதில்லை என்பதால்தான். அதாவது இந்த மாஸ்க்குகள் ஒரு திசையில்தான் செயற்படுகின்றன.

மேற்படி மாஸ்க்குகள் மருத்துவ மற்றும் துப்புரவுப் பிரிவினருக்குத் தேவைப்படும் என்பதால் மற்றவர்களுக்குத் துணியில் செய்யப்படும் மாஸ்க்குகளும் பரிந்துரைக்கப்படுகின்றன. மருத்துவ மற்றும் சர்ஜிகல் வகைகளுக்கு அடுத்துப் பாதுகாப்பானது ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்குகள் கொண்ட மாஸ்க். இரட்டை அடுக்கு மாஸ்க்குகளை 'ஹைப்ரிட் மாஸ்க்' என்கிறார்கள். இதில் பருத்தி இழைகளினால் ஆன ஒரு அடுக்கும் பட்டு, மென்பட்டு கம்பளி ஆகிய ஏதாவதொன்றில் ஆன ஒரு அடுக்கும் இருக்கும். இது 80 சத விகித சிறு துகள்களையும், 90 சத விகித பெரிய நீர்த் திவலைகளையும் தடுக்கும் சக்தி கொண்டது.

மூன்று இழைகளைக் கொண்ட மூன்றடுக்கு மாஸ்க்கும் ஏற்கத்தக்கது தான். அதில் உட்புறம் உள்ள இழை, ஈரத்தை உறிஞ்சக் கூடியதாகவும், நடுவில் உள்ள இழை வடிகட்டக் கூடியதாகவும், வெளியில் உள்ள இழை பாலியஸ்டர் போல உறிஞ்சும் தன்மை இல்லாத இழைகளைக் கொண்டதாகவும் இருக்கும்.

மெல்லிழைகளால் ஆன ஒரே அடுக்குக் கொண்ட பருத்தி மாஸ்க்கைப் பயன்படுத்த நினைத்தால் அதை சூரிய வெளிச்சத்தின் மூலமாகப் பாருங்கள். இழைகளை வெகு தெளிவாகப் பார்க்க முடிந்தால் அதன் வடிகட்டும் தன்மை குறைவானதாகவே இருக்கும். எனவே இறுக நெய்த 100 சதவிகித பருத்தியினால் ஆன மாஸ்க் சிறந்தது. ஒரே அடுக்குக் கொண்ட பருத்தி மாஸ்க்கைத்தான் பயன்படுத்த முடிகிறது என்றால் அதற்கு உள்ளே இரண்டு டிஷ்யூ தாள் களைச் செருகியும் பயன்படுத்தலாம். மருத்துவ மாஸ்க், சர்ஜிகல் மாஸ்க் போன்றவற்றோடு ஒப்பிடும்போது வெறும் பருத்தித் துணியினால் மாஸ்க் அணிந்திருப்பவர்கள் தொற்றுக் கிருமிகளால் பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம். என்றாலும் மாஸ்க்கே அணியாதவர்களை விட அந்த வாய்ப்பு 54 சதவிகிதம் குறைவாகும். மாஸ்க் அணியாதவர்களிடமிருந்து தொற்று 16 அடி தூரத்திலிருந்து கூட ஏற்படலாம். ஆனால் பருத்தி மாஸ்க் அணிந்தவர்களால் தொற்று உண்டாவது அவர்களிடமிருந்து 5 அடி தூரம் மட்டுமே இருப்பவர்களுக்குத்தான்.

ஆனால் எந்த மாஸ்க்குமே சமூக விலகல் அளிக்கும் பலனை அளித்து விடாது என்பதையும் மனதில் கொள்ளுங்கள். எனவே மாஸ்க் அணிந்தாலும் கூட பிறரிடமிருந்து ஆறு அடி தொலைவு தள்ளியே நிற்போம்.

**[நன்றி: 09.09.2020 குமுதம்]**

# “இசையாற்றல் என்பது இறைவன் தருகின்ற கொடை..”

## இசைக்கலைஞர் அன்ரன் டேவிற் உடனான நேர்காணல்

**சுண்டுக்குளி புனித யுவானியார் பங்கினைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு வி. அன்ரன் டேவிற் அவர்கள் இசைக்கலைஞராக அறியப்பட்டவர், ‘சுண்டுக்குளி இராஜன் இசைக்குழுவில்’ பொப்பிசைப் பாடகராகப் பலகாலம் வலம் வந்தவர், அதுமட்டுமன்றி கிறிஸ்தவ மெல்லிசைப் பாடல்களையும் பாடியவர். ‘இதயராகம்’ ‘இசைவண்ணங்கள்’ போன்ற இசைநாடாக்களை இந்தியக் கலைஞர்களுடன் இணைந்து உருவாக்கியவர். பாடகர் மட்டுமன்றி பாடலாசிரியர், இசையமைப்பாளர், நடிகர், நாட்டுக் கூத்துக் கலைஞர், சமூகச் செயற்பாட்டாளர் எனப் பன்முக ஆளுமைகளைக் கொண்டவர். தற்போது புலம்பெயர்ந்து நோர்வேயில் வாழும் அவரின் கலை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதில் இன்றைய கலைக் காவலன் மகிழ்வடைகின்றது.**



**தங்களுக்கு கலைத்துறையிலான ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது ?**

எல்லாமே எனது ஆலயப் பங்குத்தளமான சுண்டுக்குளி புனித சஞ்சுவான் ஆலயத்தில் இருந்துதான் ஆரம்பமாகியது.எனது ஏழுவயதில் நான் அமரர் பூந்தான் யோசேப்பு அவர்களின் ‘ஏரோடியாள் சபதம்’ நாட்டுக்கூத்தில் ‘சம்மனசு’ பாத்திரமாக நடித்தேன். அதுதான் எனது முதல் கலைத் துறைப் பிரவேசம். கோவிலில் பீடப்பரிசாரகனாக நான் பணியாற்றிய போது அங்கு கூத்து ஒத்திகை நடைபெறும். எனது குரல் வளத்தினைக் கண்ட அமரர் பூந்தான் யோசேப்பு. சம்மனசாக நடிப்பதற்கு என்னைப் பழக்கினார். இடுப்பிலே கயிறு கட்டி உயரத்திலே ஏற்றி கப்பி மூலமாக என்னை மேடைக்குக் கொண்டு வருவார்கள். அதுதான் எனது முதல் அனுபவம் தொடர்ந்து பூந்தான் யோசேப்புவின் நெறியாள்கையில் பல கூத்துக்களில் நடித்தேன். மிகுந்த சாரீர வளங் கொண்ட பல கலைஞர்கள் அப்போது இருந்தார்கள், பக்கிரி சின்னத்துரை, சில்லாலை லூயிஸ், வலேரி, சின்னத்துரை, பொன்னுத்துரை, சில்லையூர் செல்வராஜன்.... எனப்பலர். அவர்களுடன் நான் சிறுவனாக நடித்த அனுபவம் எனக்கு வாழ்க்கையில் மறக்க முடியாதது. உண்மையில் இசை என்பது இறைவனின் கொடை இறைவன் அதனை இளவயதிலேயே இனங்காட்டி செயற்படத் தூண்டினார்.

**வளர்ந்தபின் கூத்துக்களில் நடிக்கவில்லையா?**

தொடர்ச்சியாக நடிக்கவில்லை சந்தர்ப்பம் கிடைத்தபோது நடித்தேன். இறுதியாக 1989 ஆம் ஆண்டு சஞ்சுவான் ஆலயத்தின் நூறாவது ஆண்டுவிழாவில் ‘சஞ்சுவான்’ நாட்டுக்கூத்தில் ஏரோதனாக நடித்தேன். வெளிநாட்டில் நவீன கூத்துக்களிலும் நாடகங்களிலும் நடித்துள்ளேன்.

**நீங்கள் பல்வேறு ஆளுமைகளைக் கொண்டிருந்தாலும் ‘பொப் இசைப் பாடகர் அன்ரன் டேவிற்’ என்பதுதான் உங்கள் அடையாளம் என்று நினைக்கின்றேன். பொப் இசைத் துறைக்குள் எவ்வாறு நுழைந்தீர்கள்?**

சிறிய வயதில் இருந்தே வானொலியில் கேட்கின்ற பாடல்களை மேசையில் தாளந் தட்டிப்பாடுவேன். குரல் வளமும் இருந்த காரணத்தினால் எமது சஞ்சுவான் ஆலயத்தின் பாடகர் குழாமிலும் நான் பாடல்களைப் பாடினேன். எனது பாடசாலையான புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பல்வேறு இசைநிகழ்ச்சிகளில் பாடினேன். எனது குரல் வளத்தினையும் பாடுந் திறனையும் கண்ட ‘சுண்டுக்குளி ராஜன் இசைக்குழுவினர்’ என்னைத் தமது இசைக் குழுவில் இணைத்துக் கொண்டனர். அங்கு பிரபல்யமான பொப் இசைப் பாடல்களையும் கிறிஸ்தவப் பாடல்களையும், சினிமாப் பாடல்களையும் பாடினேன். அது என்னைப் பிரபல்யப்படுத்தியது. அந்தக் காலத்தில் தொடர்ச்சியாக ஒவ்வொரு இரவும் எங்காவது கச்சேரி இருக்கும், அது பொப் இசை கொடிகட்டிப் பறந்த காலம் இலங்கை முழுவதும் சென்று இசை நிகழ்ச்சிகளை மேற்கொள்வோம். அதிக இரசிகர்கள் எமக்கு இருந்தார்கள்.

**‘ஹிந்தி இசைத் தென்றல்’ என்று உங்களை வர்ணிப்பதனை அறிந்துள்ளோம். ஹிந்திப்பாடல்களை எவ்வாறு பாடத்தொடங்கினீர்கள்..?**

அக்காலத்தில் இலங்கை வானொலியில் ‘தேன் கிண்ணம்’ என்னும் நிகழ்ச்சி நடைபெறும் அதில் ஹிந்திப்பாடல்கள் போடுவார்கள்பிரபல்யமானஹிந்திப்பாடல்களை நான் கேட்டு மனப்பாடம் செய்து பாடுவேன். அதன் வார்த்தைகளின் அர்த்தமோ சரி பிழையோ தெரியாது கேட்பதைப் பாடுவேன். அதனைப் பொப் இசைக் கச்சேரியில் பாடியபோது எனக்கான இரசிகர் அலை கூடியது. எங்கு சென்றாலும் கச்சேரிசோர்ந்துபோகின்றபோதுஎன்னை அழைப்பார்கள் இந்திப் பாடல்களைப் பாடுவதற்கு. பார்வையாளர்களை அது உற்சாகப்படுத்தும். அவ்வாறுதான் நான் பிரபல்யமாகினேன். ஆனால் நான் பின்னர் கொழும்புக்குச் சென்று சில குழுக்களின் இசைநிகழ்ச்சிகளில் பாடியபோது ரொணி கசன் அவர்களோடு தொடர்பு ஏற்பட்டது அவரிடமிருந்துதான் ஹிந்திப்பாடல்களின் வரிகளைத் தெளிவாகக் கற்றுக் கொண்டு பாடத்தொடங்கினேன். தமிழகத்தில் முதலாக அப்பாடல்களைப் பாடினேன் எனக்கு ஹிந்தி தெரியும் என்றே எல்லோரும் நினைத்துவிடுவார்கள். எல்லாமே கேள்வி ஞானம்தான்.

**காவலூர் யோவான்**

**தமிழகக் கலைஞர்களுடன் உங்களுக்கு எவ்வாறு உறவு ஏற்பட்டது ?**

தமிழகத்திற்குச் சென்று பாடல்களைப் பாடும் சந்தர்ப்பம் எனக்குக் கொழும்பில் இருந்த இசைக் குழுக்களின் தொடர்பினால் ஏற்பட்டது. தமிழகத்திற்குச் சென்று வந்த அனுபவம் பல திரைப் பிரபலயங்களோடு பழகுவதற்கும் அறிமுகங்களைப் பெறுவதற்கும் காரணமாகியது சிவாஜி கணேசனின் ஒரு குடும்ப நண்பராக அவருடன் பழகி உள்ளேன். அவ்வாறு பல நடிகர்களுடன் மட்டுமன்றி பாலசுப்பிரமணியம், இளையராஜா, ரகுமான், யேசு-தாஸ் என எல்லாக் கலைஞர்களோடும் எனக்கு அறிமுகம் இருந்தது. அதுவே நான் இசைத்தொகுப்புக்களை மேற்கொள்வதற்கும் காரணமாகியது.

**நீங்கள் வெளியிட்ட இசைத் தொகுப்புக்கள்..?**

இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள இசைக் கலைஞர்களையும் ஒலிப்பதிவுக் கூடங்களையும் முதன்முதலில் பயன்படுத்தியவன் நான் தான். இன்று பலரும் பயன்படுத்துகின்றார்கள். முதல்முதலாக 1972 ஆம் ஆண்டு ‘இதுவும் ஒரு உதயம்’ என்னும் இசை நாடாவை தமிழகத்தில் ஒலிப்பதிவு செய்திருந்தேன். பின்னர் 1989 ஆம் ஆண்டு ‘இதய இராகம்’ என்ற இசைநாடாவை வெளியிட்டேன். அதில் பிரபல தென் இந்தியப் பாடகி சித்திரா உட்பட பல இந்தியக் கலைஞர்களுடன் பணியாற்றி அந்த இசை நாடாவை உருவாக்கினேன். அதன்பின்னர் ‘இசைவண்ணங்கள்’ என்ற இசைத் தட்டினையும் உருவாக்கினேன்.

**‘இதயராகம்’ பாடல்கள் தனித்துவமானவை என்று கூறுவார்கள் அதற்குக்காரணம்..?**

இதயராகத்தின் பாடல்கள் அனைத்தையும் நானே எழுதி, நானே இசை அமைத்திருந்தேன். அப்பாடல்கள் அனைத்தும் கிறிஸ்தவப் பாடல்கள். ஆனால் கிறிஸ்தவப் பாடல்களுக்குள்ளேயே அன்றைய ஈழத்தமிழரின் அவல நிலையைத் தான் பாடினேன். குறிப்பாக இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களால் மக்கள் துன்பப்பட்ட காலம். எனவே அவற்றினையே வேண்டுதலாக்கிப் பாடல்களாக்கினேன் உதாரணமான ‘நீயே சரணமென’ என்ற பாடலில் வருகின்ற வரிகளில் “ அணைக்க வந்த கரங்கள் இன்று அடித்து எம்மை நொருக்குதையா வேலி-யே பயிரை மேய்வதனால் ஆடுகள் முள்ளை மேய்கின்றன…” என வரிகள் வரும். அப்படித்தான் எல்லாப் பாடல்களும் அமைந்தன. இந்தக் காரணத்தினால் அது பிரபல்யமானது மட்டுமன்றி அன்றைய மக்களுக்கு ஆறுதலாகவும் இருந்தது.

அதில் “அம்மா அன்புத்தாயே அணைத்து சுகம் தருவாயே..” என்ற பாடல் இன்றும் தேவாலயங்களில் பாடப்படுகின்றது. அண்மையில் புனித ஹென்றிஅரசர் கல்லூரியின் உப அதிபர் அருட்திரு றெஜிக்குமார் அவர்கள் அதனை நான் தான் எழுதி இசை அமைத்தேன் என்பதனை அறிந்ததும் மகிழ்வுடன் நினைவுகூர்ந்து தாங்கள் படிக்கின்ற காலத்தில் அப்பாடல்




தமக்கு மிகுந்த ஆறுதலைத் தந்ததாகக் குறிப்பிட்டார். அந்த வகையில் இதயரா-கம் உண்மையில் எனது மறக்கமுடியாத படைப்புத்தான்.

**புலம்பெயர்தேசங்களில் உங்கள் கலைப்பணி எவ்வாறு அமைந்திருந்தது ?**

நான் புலம்பெயர்ந்து செல்வதற்குக் காரணமே அக்காலத்து அரசியல் நிலைதான் நான் குடும்பமாக நோர்வேயில் குடி-யேறிய போதும், தாய் மண்ணைப் பற்றிய கனவுகளுடனேயே வாழ்ந்தேன். அங்கு சென்றும் நான் ஓய்ந்து விடவில்லை இசை நிகழ்ச்சிகளையும் நாடகங்களையும் நிகழ்த்தினேன் தொடக்காலத்தில் சுதந்திர தாகம் என்னும் நவீன நாட்டுக் கூத்தினை நண்பர் சர்வேயுடன் இணைந்து தயாரித்தேன். அதில் எமது புலம்பெயர்ந்த மக்களின் துயரத்தினையே நாடகமாக்கினோம். அதனை ஒஸ்லோ பல்கலைக் கழகத்திற்கு அழைத்து மேடையேற்றினார்கள். மிகப்பெரிய வரவேற்புக் கிடைத்தது. பின்னர் அதனை லண்டனிலும் கனடாவிலும் மேடையேற்றினோம். அது மட்டுமன்றி கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா நிகழ்வுகளில் பல நாடகங்களை மேடையேற்றினேன். எனது பிள்ளைகளையும் அதில் ஈடுபடுத்தினேன். அதுமட்டுமன்றி எனது இரண்டு மகள்மாருடன் பல இளையவர்களை ஒன்றிணைத்து இசைக் குழு ஒன்றினை உருவாக்கி ஐரோப்பா எங்கும் நிகழ்வுகளை நடத்தினோம். எமக்கு மிகப்பெரிய வரவேற்புக்கிடைத்தது. அதனைக் கலைநிகழ்வு என்பதற்காக மட்டும் நிகழ்த்தவில்லை. அதனூடாக ஈழத்தில் துயர்ப்படும் மக்களுக்கு உதவி செய்வதனையும்நோக்கமாகக்கொண்டிருந்தேன்.

**நீங்கள் பல்வேறு உதவிப்பணிகளை ஆற்றியமையை அறிகின்றோம் அவைபற்றி..?**

2007 ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணம் வந்து ஆயர் அவர்களுடனும், கரித்தாஸ் நிறுவன இயக்குநருடனும் கதைத்து அனுமதி பெற்றுச் சென்று நோர்வேயில் ‘கத்தோலிக்க நலன்புரி மன்றம்’ (Catwas) என்ற ஒன்றினை உருவாக்கி அதன் மூலமாக நிதியைச் சேகரித்து இங்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவற்றினை அனுப்புவது என்ற நோக்கத்தோடு செயற்படத் தொடங்கினேன். அதற்காக நான் ‘உதவும் கரங்கள்’ என்ற கலை நிகழ்சித் தொடரினை ஆரம்பித்தேன். அந்நிகழ்வில் எமது இசைநிகழ்ச்சி மட்டுமன்றி நாடகங்கள் அந் தந்த இடங்களில உள்ள இளங்கலைஞர்களின் நிகழ்வுகள், சிலவேளைகளில் தமிழகத்தில் இருந்து வரும் கலைஞர்களின் நிகழ்வுகள் என பலவற்றையும் இணைத்து அந்நிகழ்சிகளை நடத்தினோம். நோர்வே பிரான்ஸ் லண்டன், ஜேர்மனி கனடா என பல நாடுகளிலும் நிகழ்வுகளை நடத்தி சேருகின்ற நிதியினை இங்கே அனுப்பினோம். அவை பெரும்பாலும் வன்னிப்பகுதிக்குப் பயன்படுத்தப்பட்டது. அனாதை இல்லங்கள், நலன்புரி முகாம்கள், பாடசாலைகள் என பலவற்றுக்கும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறான சிந்தனைகள் எனக்கு வெளிநாட்டுக்குச் சென்றதன் பின்னர் மட்டுமல்ல இங்கே இருக்கின்றே போதே இருந்தது எனலாம். யாழ் ஆசனக்கோவில் கட்டட நிதிக்காக, வைத்திய கலாநிதி பிலிப் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நாம் அப்போதே சுண்டுக்குளி ராஜன் இசைக் குழுவின் மூலமாக நிதிசேகரித்து உதவினோம். அதனை சிலவருடங்களுக்கு முன் ஐபிசி தொலைக்காட்சி சேவை நேர்காணல் ஒன்றில் ஆயர் அவர்களின் நினைவூட்டலோடு பகிர்ந்து கொண்டேன். அவ்வாறே புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திற்காவும் நோர்வேயில் நிகழ்சிகளைச் செய்தோம்.

**உங்களுடைய பொப் இசை சார்ந்த முயற்சிகள் புலம் பெயர்ந்த மண்ணில் எவ்வாறான வரவேற்பைப்பெற்றன..?**

புலம்பெயர்ந்த மண்ணில் இசை நிகழ்வுகளுக்கு என்றும் வரவேற்பு இருந்து கொண்டே இருக்கின்றது. பிரமாண்டமான இசை நிகழ்வுகளை நான் ஒழுங்கு செய்தது மட்டுமல்ல எமது பழைய இசைக் கலைஞர்களான ஏ.ஈ.மனோகரன், அமுதன் அண்ணாமலை, நித்தி கனகரெட்டினம் போன்றவர்களையெல்லாம் ஒன்றிணைத்து ‘இசைவண்ணங்கள்’ என்ற நிகழ்வையேர்மனில் நடத்தினேன் அது மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. அவ்வாறே தென்னிந்திய இசைக் கலைஞர்கள்பாடகர்களையெல்லாம் கூட பல நிகழ்வுகளுக்கு அழைத்து நிகழ்வுகளை நடத்தினேன்.

**உங்களது கலைப்பணிக்கு நோர்வேயில் எவ்வாறான வரவேற்புக்கிடைத்தது?**

எமது புலம்பெயரந்த மக்கள் மத்தியில் பெருமளவில் ஆதரவும் சிறுபகுதியினரிடம் எதிர்ப்பும் இருந்தது.

(தொடர்ச்சி 11 பக்கம்)

## காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(அமலன், யாழ்ப்பாணம்)*
**கேள்வி: ஞானசார தேரர் தன்னைக் கடத்தியதாக ரத்னசார தேரர் தகவல் வழங்கியுள்ளார். ஒரு தேரரை இன்னொரு தேரர் கடத்துவது என்பது சாத்தியமா?**
**ப:** அமலன், இதுவும் சாத்தியம், இலங்கையில் எதுவும் சாத்தியம்!

*(ஜஸ்ரின், யாழ்ப்பாணம்)*
**கே: இனவாதம் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படும் என' இலங்கையின் தற்போதைய நீதி அமைச்சர் கௌரவ அலி சப்றி கூறியிருக்கின்றார். நல்ல ஆலோசனைதானே!?**
**ப:** ஜஸ்ரின், அருமையான ஆலோசனை! புனர்வாழ்வு அளிக்கப்படும் முகாம்களின் நாடாளுமன்றத்தையும் ஒன்றாகப் பதிவு செய்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் புனர்வாழ்வு அளிப்பது தான் நன்மை பயக்கும்!

*(ரவி, மன்னார்)*
**கே: குடிப்பவர்கள், குடிப்பதற்குப் பல காரணங்களைக் கூறுகின்றார்கள். எக்காரணத்தையாவது முன்வைத்துக் குடிப்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா?**
**ப:** ரவி, ஏதாவது நல்லது நடக்கும்போது அதனைக் கொண்டாடச் சிலர் குடிக்கிறார்கள்! ஏதாவது துன்பமானது நடக்கும்போது அதனை மறப்பதற்கு இன்னும் சிலர் குடிக்கிறார்கள். ஒன்றும் நடக்காதபோது ஏதாவது நடக்கவேண்டும் என்பதற்காக வேறு சிலர் குடிக்கிறார்கள். இப்படிக் குடிப்பவர்கள் ஒருகட்டத்தில், 'இப்படியே எப்போதும் குடித்துக்கொண்டிருக்க முடியாது, இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும்!' என்பார்கள், பின், 'இதுபற்றிக் பேசுவதற்குக் கொஞ்சம் குடித்தால்தான் நன்றாகப் கதைக்கலாம்!' என்பதால் மற்றும் சிலர் குடிக்கிறார்கள்! எப்படி இருக்கின்றன காரணங்கள்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*
**கே: 09வது நாடாளுமன்றம் கூடியிருக்கின்றது. அதில் என்ன சிறப்பு?**
**ப:** ஆனந்தன், கன்னி அமர்வு 20.08.2020 அன்று இடம்பெற்று இருக்கின்றது. கன்னி அமர்வைத் தொடர்ந்து, தொடரும் அமர்வுகள் கண்ணியமாய் நடைபெற்றால் சரி. சமையலுக்குத் தேவையான தூள் வகைகளை, குறிப்பாக, மிளகாய்த்தூள் போன்றவற்றை எத்தனை பேர் கொண்டுபோய் உள்ளே வைத்திருக்கிறார்களோ தெரியாது! இனிவரும் அமர்வுகள் சிறக்குமா அல்லது அவ் அமர்வுகளில் தூள்கள் பறக்குமா என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

*(வசந்தி, யாழ்ப்பாணம்)*
**கே: வடக்கின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையைச் சிலர் திட்டமிட்டுச் செய்கின்றார்கள் என்ற சந்தோசம் நீண்ட காலமாக நிலவி வந்தது. கிளிநொச்சியில் பிரபல பாடசாலை ஒன்றில் நான்கு மாணவர்கள் கெரோய் னுடன் கடந்த இரு வாரங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட நிகழ்வு அச்சந்தேகத்தை உறுதிப்படுத்துகின்றது. இப்படியே சென்றால் நம் நிலைமை என்னாகும்? இதற்கு யார் பொறுப்பு?**
**ப:** வசந்தி, எம் இளம் பிள்ளைகள், மாணவ மாணவியர் கல்வியில் முன்னேறாதபடி சீரழிந்து அல்லது சீர்குலைந்து போகவேண்டும் எனக் குறிவைக்கப்படுவது நீண்டகாலமாக உணரப்பட்டு வந்த ஒரு விடயம். ஆகவே, இத்தீய பரம்பல், பழக்கம் மட்டில் பெற்றோர் - பிள்ளைகள், ஆசிரியர் - மாணவர் என அனைத்துத் தரப்பினரும் விழிப்பாய்இருப்பது மிகமிக அவசியம். ஆரம்பத்திலேயே கிள்ளியெறிய வேண்டிய மரத்தைத்தான் பின்னர் கோடரிபோட்டுத் தறிக்கவேண்டி இருக்கிறது! கிராமத்துக்குக் கிராமம் இராணுவ முகாம்களும் சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகளும் நிறைந்து காணப்படும் வடமாகாணத்தில் போதைப் பொருள்களின் விநியோகமும், விற்பனையும், பாவனையும் அதிகமாகக் காணப்படுவது அதிர்ச்சியைத் தருகின்றது. களவெடுத்தவன் விதானையார் வீட்டில் ஒழிந்தது மாதிரியாகத்தான் நமது நிலைமைகள் ஆகிவிட்டன!

*(மொழி, யாழ்ப்பாணம்)*
**கே: திருமணம் செய்துகொள்ளாமல் இருந்துவிடலாம் என எண்ணுகின்றேன்! உங்கள் ஆலோசனை என்ன?**
**ப:** மொழி, உங்களுக்கு எம்மொழியில் கூறலாம் என ஒரு கணம் சிந்திக்கிறேன்! இவ்வாறுதான் ஒரு பெண், "நான் திருமணம் செய்ய விரும்பவில்லை! நான் நன்றாகப் படித்திருக்கிறேன், சுய நிறைவோடும் திருப்தியோடும் இருக்கிறேன். ஆனால், திருமணம் செய்துகொள்ளும்படி என் பெற்றோர் என்னை வற்புறுத்துகின்றனர். என்ன செய்யலாம்?" என உளநல மருத்துவரிடம் ஆலோசனை கேட்டு வந்தாள். அவரோ, 'உங்கள் வாழ்க்கையில் பெரிய சாதனைகளை நீங்கள் அடைவீர்கள் என்பதில் சந்தேகமில்லை! ஆனால், நீங்கள் நினைப்பது போல எல்லாம் எப்போதும் நடந்தேறுவதில்லை! சிலவேளைகளில், உங்கள் திட்டங்கள் தோல்வியுறும்! அவ்வேளைகளில் நீங்கள் யாரைக் குற்றம் சாட்டுவீர்கள்!, உங்களையா!?' எனக் கேட்கிறார். உடனே அப்பெண், "இல்லை இல்லை, அது எப்படி என்னைக் குற்றம் சாட்டமுடியும்!?" என்கிறாள். அப்போது அந்த உளநல மருத்துவர், 'உண்மை. அதற்காகத் தான் உங்களுக்கு ஒரு கணவன் தேவை!' என்கிறார் முடிவாக! மொழி, என் மொழி புரிகிறதா?

*(வாணன், மன்னார்)*
**கே: ஆசைக்கும் அன்புக்கும் என்ன வித்தியாசம்?**
**ப:** வாணன், நீங்கள் ஒரு பூவின்மீது ஆசை கொள்கிறபோது அதனை உடனே பறிக்கப்பார்ப்பீர்கள்! பின்னர் பறித்தும் விடுவீர்கள். ஆனால், அதே பூவை நீங்கள் அன்புசெய்வீர்கள் என்றால் ஒவ்வொரு நாளும் அதற்கு நீர் பாய்ச்சுவீர்கள்! இதனைப் புரிந்துகொண்டால் வாழ்க்கையைப் புரிந்துகொள்வீர்கள் என்கிறார் புத்தர்.




**(சென்றவாரத் தொடர்ச்சி...)**

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

**இறைமக்கள் பற்றி சில பதிவுகள்**

தன்னுடன் பணியாற்றிய குருக்கள் பற்றி ஆயர் 1861ம் ஆண்டின் நிலவரப்படி பொதுவாகத் திருப்தி அடைந்தாலும் இறைமக்கள் மட்டில் அவ்வளவு திருப்தியடைந்திருந்தார் என்று கூற முடியாது. இதற்கு இப்பாரிய திருத்தூது மாவட்டத்தில் பல்வேறு பணிகளை (பங்குகள் விரிவாக்கம், கல்விப்பணி விரிவாக்கம், பெண்கள் கல்வி போன்றவை) விரிவாகக் குருக்கள், துறவிகள் பற்றாக்குறையும் ஒரு முக்கிய காரணமாயிருந்திருக்கலாம்.

- நேர்மை, உண்மைத்தன்மை ஆகியவை இவர்கள் கடைப்பிடிக்கும் பண்புகள் என்று கூறமுடியாது. மறைப்பணியாளர்கள் எவ்வளவு முயன்றும் இவர்களது இக்குறைகளைக் களைவது சிரமமாக உள்ளது.
- ஆன்மீகக் காரியங்கள் பற்றிய அறியாமையையும் அக்கறையின்மையையும் அவர்களில் அவதானிக்கலாம் அவர்களுள் பலருக்குச் சமயம், நம்பிக்கை என்பது சுரூபங்கள், படங்கள், வெளிச்ச வேலைப்பாடுகள், காதுகளைச் செவிடாக்கும்மேளச்சத்தங்கள்போன்றவெளியாடம்பரங்களிலேயே தங்கியுள்ளது.
- இவர்களது வாழ்வில் தென்படும் பல்வேறு ஒழுங்கீனங்களைவைத்துப் பார்க்கும் போது இவர்களது இல்லங்களில் கிறிஸ்தவக்கல்விக்கு அறவே இடமில்லையென்று தென்படுகின்றது. பெற்றோர் எந்த வித மறையறிவும் பெற்றிருக்காத போது அவர்கள் தமது பிள்ளைகளுக்கு மறையறிவை வழங்குவார்கள் என்று எவ்வாறு எதிர்பார்த்திருக்க முடியும்? அத்துடன் இவர்கள் தங்கள் பிள்ளைகளை மறைக்கல்வி வகுப்புக்களில் கலந்து கொள்ளவும், அருளடையாளங்களைப் பெறவும், திருப்பலியில் பங்கெடுக்கவும், ஆலயத்திற்கு அனுப்பவும் அக்கறை காண்பிப்பதில்லை. அத்துடன் வருங்காலத் தாய்மாராகவிருக்கும் பெண் பிள்ளைகளுக்கு இங்கு நன்கு ஊறிப் போன வழக்கத்தின்படி எல்லாவித கல்விச் செயற்பாடுகளும் வழங்கப்படாத நிலையில் பெற்றோர் தேர்ந்தெடுக்கும் ஆண்களை அதுவும் சிலவேளைகளில் இப்பிள்ளைகளின் விருப்பத்துக்கு மாறாக திருமணம் முடித்துக் கொடுக்கப்படும் போது இவர்கள் தங்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளை எவ்வாறு கல்வியில் நாட்டமுள்ள, ஒழுக்கத்திலும் பக்தியிலும் ஈடுபாடுள்ளவர்களாக வளர்க்க முடியும்? இந்த ஆபத்தான குறைபாடுகளை இல்லாதொழிப்பது அல்லது குறைந்தபட்சம் படிப்படியாகக் களைவதற்கு நானும் எனக்கு முன் இருந்த திருத்தூது முதல்வரும் இங்கு பணியாற்றிவரும் மறைபணியாளர்களும் இந்தப் பொறுப்பற்ற பெற்றோர் மட்டில் மிகவும் கண்டிப்புடன் நடக்கும்படி வற்புறுத்தி வந்துள்ளோம். தங்களது இத்தவறின் எண்ணப்போக்குகளையும் செயற்பாடுகளையும் மாற்றியமைக்காவிடின் அவர்களுக்கு அருளடையாளங்களை வழங்க மறுக்கவும் கேட்டிருந்தேன். மறைபணியாளர்கள் சில காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டமையினால் பல பெற்றோரும் அவர்களது ஆண், பெண் பிள்ளைகளும் பயனடைந்துள்ளனர் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

**இறை மக்களின் நம்பிக்கை (விசுவாசம்) வாழ்வு**

பொதுவாக எமது கிறீஸ்தவர்கள் திரு அவை நம்புவதையும், கற்பிப்பதையும் நம்பி ஏற்றுக்கொள்கின்றார்கள் தான். எனினும் சிலருடைய இறை நம்பிக்கை மிக உறுதியானது என்று கூறமுடியாது. இதற்கு ஒரு காரணம் இவர்கள் கிறிஸ்தவரல்லாதோரோடும், புரட்டஸ்தாந்து சகோதரரோடும் இரண்டறக்கலந்து வாழ்கின்றமையாகும். சிலர் அரச பணிகளில் இலகுவில் சேர்த்துக்கொள்ளப்படவும் அல்லது கத்தோலிக்கரல்லாத, புரட்டஸ்தாந்து சபையினருடன் திருமண பந்தத்தில் இணைவதற்கும் கத்தோலிக்க சமயத்தை விட்டுச் சென்றுள்ளனர். இவ்வாறு விலகிச்சென்றவர்களுள் சிலர் திரும்பவும் கத்தோலிக்க திரு அவையில் வந்து சேர்ந்த சந்தர்ப்பங்களுமுண்டு.

இன்னும் சிலர் கத்தோலிக்க திரு அவையிலிருந்து முறைப்படி விலகாமலிருப்பினும் கத்தோலிக்க திருமறைக்கெதிரான நூல்களைத் தம்வசம் வைத்திருந்து வாசிப்பதும் உண்டு. ஆயினும் சந்தர்ப்பம் வரும் போது குறிப்பாக திரு-நாள் மறையுரைகள், மகாஞானொடுக்கம் போன்ற ஆன்மீகப்பயிற்சிகள் இடம் பெறும் போது அவர்கள் வசமுள்ள கத்தோலிக்க மறை நம்பிக்கைக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நூல்களை நாம் பறிமுதல் செய்வதுண்டு. இன்னும் சில கத்தோலிக்கர் தமது பிள்ளைகள் பயிலும் புரட்டஸ்தாந்து. பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படாதிருப்பதற்காக கத்தோலிக்கத் திரு அவையிலிருந்து முற்றிலும் விலகியுள்ளனர்.

இவ்விடயத்தில் பிள்ளைகளைக் குறை சொல்லுவதிலும் பார்க்கப் பெற்றோரையே குறை சொல்ல வேண்டும்.

கடும் நோய்க்குள்ளாகும் போது சிலர் அஞ்ஞான (இந்து சமய)க் குருக்களிடம் அல்லது பரிகாரியாரிடம் சென்று மூட நம்பிக்கைகளில் ஈடுபடுவதும் பேய்க் காரியங்களில் ஈடுவடுவதும் உண்டு.

இன்னும் சிலர் குறிசொல்பவர்கள், சாஸ்திரம் - கைரேகை பார்க்கிறவர்களிடமும் சென்று தமக்கு எதிர்காலம் எப்படியிருக்கும் என்று அறிவதிலும், என்னென்ன செய்யவேண்டும், என்னென்ன செய்யக்கூடாது என்று சொல்லும்படியும் கேட்பார்கள். இறுதியாக இன்னும் சிலர் சில பொய்த்தெய்வங்கள் தமக்குத் தீங்கு விளைவிக்கலாம் என்று பயந்து தமக்குத் தீங்கு வரக்கூடாது என்றும் எடுத்த காரியம் சித்தியடைய வேண்டுமென்றும் சில மூட நம்பிக்கைச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்கள். *(தொடரும்.....)*

# காவலன் கலசம்

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே. உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையாக இருக்கும் உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன்.

என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக் காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப் படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

(உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும் அடுத்த 3 நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும். இச் செபத்தைப் பிரிசுரிப்பதாக வாக்குபண்ணவும்) (AD/49)

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 15 | 07 |
| 06 | 09 |
| 1936 | 2013 |

அமரர்

**மோசஸ் பெனடிக்ற் ஆசீர்வாதம்**

**"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் உள்ளது"**

இறைவன் இவருக்கு நிலைவாழ்வு அளிப்பாராக

AD 47

பிரிவால் துயருறும்
மனைவி
உறவினர்கள்

இல:- 182/2ம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்

## ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருவிழா

யாழ். போதனா வைத்தியசாலை புனித ஆரோக்கிய அன்னையின் வருடாந்தத் திருவிழா 20.09.2020 அன்று காலை 7.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கோயில் கொண்டு எழுந்தருளி நோயாளிகளுக்கு அருள்மழை பொழியும் புனித ஆரோக்கிய அன்னையின் திருவிழா ஆயத்த நிகழ்வாக 17.09.2020 மற்றும் 18.09.2020 திகதிகளில் 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் திருப்பலி இடம்பெறும்.

19.09.2020 திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை வழிபாட்டோடு ஆசீர்வாதம் இடம்பெறும். அனைவரும் கலந்துகொண்டு அன்னையின் அருள் ஆசீரைப் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## பாதுகாவலன் பத்திரிகையை அறிமுகம் செய்வோம்

இலங்கையின் முதல் கத்தோலிக்க தமிழ் பத்திரிகையாகிய பாதுகாவலன் வீட்டுக்கொன்று சென்றடைய வேண்டும் என்பது எமது விருப்பு.

உங்கள் உறவினர், நண்பர்களுக்கு பாதுகாவலன் பத்திரிகையை வாசிக்கத் தூண்டி அவர்கள் பாதுகாவலனை பெற்றுப் பயன்பெற ஊக்குவிக்குமாறு உங்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

தற்போது நாம் ஐயாயிரம் பிரதிகளை மட்டுமே பிரசுரிக்கின்றோம். அது பத்தாயிரமாக உயர்வடைய வேண்டும் என்பதே எமது இலக்காகும்.

## பெயர் பொறிக்கப்பட்ட மெழுகுவர்த்திகள் விற்பனைக்கு

திருமண விழா, திரு முழுக்கு -முதன் நன்மை விழா, பிறந்த தினவிழா ஆகியவற்றில் பயன்படும் மெழுகுவர்த்திகளில் உங்கள் பெயர்கள், படங்கள் அழகாகப் பொறித்து கத்தோலிக்க அச்சகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

## 25வது ஆண்டு நிறைவு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 22 |
| 09 | 09 |
| 1923 | 1995 |

அமரர்

**சுவாம்பிள்ளை பிரான்சிஸ்பிள்ளை (தம்பித்துரை)**

கத்தோலிக்க அச்சகத்தில் பல ஆண்டுகள் பணிபுரிந்து யாழ்
திரு அவைக்கு அணி செய்தீரே!
ஆனையூர் அடைக்கல அன்னையின் மைந்தனாய் நாட்டுக்கூத்துக்
கலையின் தந்தையாய் திகழ்ந்தீரே!
நாட்டுக்கூத்துக் கலைமணி, நாட்டுக்கூத்துச் சக்கரவர்த்தி
என்னும் உயர் விருதுகளைப் பெற்று ஆனையூருக்குப்
பெருமை சேர்த்தீரே!
அன்னைக்கு நற்கணவராகவும் எமக்கு
நற்தந்தையாகவும் வாழ்ந்து எம்மை எல்லாம் உருவாக்கினீரே!
ஆண்டுகள் இருபத்தி ஐந்து சென்றாலும்
மறவோம் உம் பாசத்தை
நினைப்போம் எம் நினைவுள்ள வரை!

AD53

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

## நீங்கா நினைவில் 1ம் ஆண்டு



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 18 | 12 |
| 11 | 09 |
| 1939 | 2019 |

AD 52

அமரர்

**பேதுரு அந்தோனிப்பிள்ளை (ஓய்வு பெற்ற பிரதி அதிபர்)**

ஓராண்டு ஆனதேயப்பா! எனைப் பிரிந்து நீர் சென்று
ஒரு நாளும் உமை நினையா தருணங்கள் எமக்கில்லையப்பா
நெஞ்சினிலே நிலையாக நின்று
நினைவுகளில் மகிழ்வைத் தந்து
பலரிடமும் நட்பும் பாராட்டும் பெற்று
இடர்படினும் உதவிகள் புரிய
விரைந்திடும் உம் நற்பண்புகள்
நீர் எம்மோடு கூட இருப்பதாக
உருவகிக்கின்றன அப்பா
இறைவா! நீர் தந்த எம் அன்பு அப்பாவுக்காக
நன்றிக்கரம் குவிக்கின்றோம்
அவரை உம் திருப்பாதம் சேர்ந்து மகிழச் செய்தருளும்

1147, திருநகர் தெற்கு
கிளிநொச்சி

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04 | 13 |
| 12 | 09 |
| 1940 | 2019 |

AD 51

அமரர்

# மரியாம்பிள்ளை பேரின்பநாதன்

"ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"
திபா 116 :15

மண்ணுலக வாழ்வு முடிந்து
ஆண்டு ஒன்றாகி விட்டதா?
நம்பவும் முடியவில்லை
மறக்கவும் முடியவில்லை
நாட்கள் நகர்ந்தாலும்,
நினைவுகள் நகரவில்லை.

நம்முடன் வாழ்ந்த உங்களை,
நம் நினைவிலிருந்து
நீக்க முடியுமா?
தினம் தினம் பிரார்த்திக்கிறோம்
அமைதியில் இளைப்பாறுங்கள்.

எமது தந்தையாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 14.09.2020 திங்கட்கிழமை அன்று காலை 6.00 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்

- குடும்பத்தினர்-

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| அன்னை மடியில் | ஆண்டவர் அடியில் |
|---|---|
| 19 | 21 |
| 07 | 08 |
| 1958 | 2020 |

AD 50

அமரர்

**திருமதி ஜறின் இமெல்டா விஜயகுமாரி தேவதாஸ்(குஞ்சு)**

"இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம் ஆகவே நீ எனக்கே சொந்தம்" (எசாயா.43:1)

**கண்முன்னே வாழ்ந்த காலம்**

**கனவாகிப் போனாலும்** **விண்ணோக்கிச் சென்றாலும்**
**எம்முன்னே சிரித்தமுகம்** **கண்விட்டு மறையாமல்**
**எந்நாளும் உயிர் வாழும்** **கனகாலம் இருப்பீர்கள்**
**மண்விட்டு மறைந்த நீங்கள்** **அம்மா எம்மோடு**

அம்மாவின் இறுதிச்சடங்கில் பங்கு கொண்டு செபித்த அனுதாபத்தைத் தெரிவித்த குருக்கள், அருட்சகோதரிகள், துறவிகள், உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

19.09.2020 காலை 11.00 மணிக்கு யாழ்ப்பாணம் சுண்டிக்குளி தூய திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

"சொலமன்ஸ்"
7, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## காவலன் கலசம்

# வழிபாடு வாழ்வாகுமா!!




அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

**வழிபாட்டில் திரு இசை**

'அனைத்துலக திருச்சபையின் இசைமரபு மதிப்புமிக்க ஒரு கருவூலம்' (திவ:112 (திருவழிபாடு கொள்கைத் திரட்டு - Sacrosanctum Concilium). இந்த இசைமரபை முழுமையாக வாழ்வது என்பது ஒரு தனி ஆர்வம். வழிபாட்டில் இடம்பெறும் இசையால் கடவுளுக்கு புகழைப் பாடுவதையும் நன்றியைத் தெரிவிப்பதையும் நாம் முழுமையாக நம்புகின்றோம். வழிபாட்டின் சொற்களுக்கும் செயல்களுக்கும் அடையாளங்களுக்கும் வழிபாட்டுக் காலத்திற்கும் அர்த்தம் கொடுப்பது இந்த இசையே.

திருஅவையின் வழிபாட்டுக் காலத்திற்கேற்ப பாடல்களையும் அதனது அர்த்தத்தையும் நாம் மாற்றியமைக்கிறோம். இந்த மாற்றம் உலக வளர்ச்சியோடு இணைந்து செல்வதும் அது தனது பாதையிலிருந்து சற்று விலகி நிற்பதையும் காணலாம். இவ்விசையில் ஏற்பட்ட மாற்றம் வழிபாட்டிலும் ஆதிக்கம் செலுத்துகின்றது. இசையால் வழிபாடு வாழ்கின்றது. புது உணர்வு பெறுகின்றது. வழிபாட்டில் கிறிஸ்து பேசுவதை உணரவும், கிறிஸ்துவோடு நாம் உரையாடவும் எமக்குள் கருவிதையாய் இருப்பது இந்த இசையே. திருமுழுக்கின் மூலம் நாம் பெற்றுக்கொண்ட கிறிஸ்துவின் குருத்துவ அழைப்பைக் கொண்டாட இசை வழிவகுக்கின்றது. இசையும் வழிபாடும் எப்போதும் பின்னிப் பிணைந்து காணப்படும் ஒரு யதார்த்தம். மனிதன் இறைவனை வேண்டும் போது அவனுக்கு வார்த்தை மட்டும் போதாதிருந்தது. ஆகவே, அவனுடன் இசையையும் சேர்த்துக்கொண்டான். ஆனால் இந்த இசை ஒவ்வொரு கலை கலாசாரத்திற்கேற்ற விதமாக தனது தனித்துவத்தையும், அதன் அடையாளத்தையும் பெற்றிருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, திருவழிபாட்டில் திரு இசை எவ்வளவு முக்கியமானது என்பதை நான் உணர்த்த விரும்புகின் றேன். வழிபாட்டில் இசையை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும், அதற்கான அணுகுமுறைகள் என்ன என்பது பற்றியும் நான் அலசிஆராய்ந்துபார்க்க முயற்சிக்கின்றேன்.

இசையின் இறையியல் பங்கு இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 'திரு வழிபாடு' எனும் கொள்கை விளக்கத்தில் அதிகமாக அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன. இக்கொள்கை விளக்கம் திருவழிபாட்டில் ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தது. திரு இசை மற்றும் திருவழிபாட்டில் பாடப்படும் பாடல்களின் ஓர் இன்றியமையாத பங்கை இது தெளிவாகச் சுட்டிகாட்டுகின்றது. 'இறை மக்களின் பங்கேற்பு' முதன்மை நோக்கத்தை அடைவதற்கான வழிமுறையாக 'திருவழிபாட்டின் இயல்புக்கேற்ப நம்பிக்கை கொண்டோர் அனைவரும் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் முழுமையாகவும், உணர்ந்தும், செயல்முறையிலும் பங்கு கொள்ள அவர்களை இட்டுச்செல்ல வேண்டுமென திருச்சபை அன்னை மிகவும் விரும்புகிறார்' திவ: 14. இந்த மாற்றம் அதாவது 'நம்பிக்கை கொண்டோர் அனைவரும்' திருப்பலியில் பங்குபெறும் போது அவர்கள் அனைவருமே திருவழிபாட்டை சிறப்பிக்கின்றனர். இதனால் தனி ஒருவர் திருப்பலியில் பாடுவதைத் தவிர்த்து திருக்குடும்பமாக அனவரும் சேர்ந்து பாடுவது வழிபாட்டின் அர்த்தத்தைத் தெளிவு படுத்துகின்றது.

புதிய ஏற்பாட்டுக் காலத்திலிருந்து முதலாம் இரண்டாம் நூற்றாண்டுக் காலங்களில் உணவு வேளைகளில் அல்லது விருந்து பரிமாறும் வேளையிலும் (தொடக்க காலத் திருப்பலி) பாடல்களை பாடுவது ஒரு வழக்கமாக இருந்துள்ளது. 'அப்படியானால் சகோதர சகோதரிகளே, செய்ய வேண்டியது என்ன? நீங்கள் கூடிவரும் போது ஒருவர் திருப்பாடலைப் பாடலாம் ஒருவர் கற்றுக் கொடுக்கலாம் ஒருவர் திருவெளிப்பாடுகளை எடுத்துரைக்கலாம் ஒருவர் பரவசப்பேச்சுப் பேசலாம் ஒருவர் அதை விளக்கிக் கூறலாம். இவை அனைத்தும் திருச்சபையைக் கட்டியெழுப்பும் வகையில் நடைபெற வேண்டும்' (தொடரும்...)



# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

## ஈழத்தில் சங்கமித்த ஐரோப்பிய முத்துக்கள்

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

**சூழ்ந்துவந்த சூறாவளி**

திருக்குடும்ப கன்னியரை எயாவோல்ட் என்னும் சிறு நகருக்கு வரவழைத்த பேருபகாரி நோய்வாய்ப்பட்டாள். இதனால் தனது வீடு தளபாடம், வருவாய் யாவற்றையும் கன்னியருக்கே மரண சாதனமாக்கி விட்டாள். இவர் இறந்ததும், உறவினா் திரண்டு வந்து யாவற்றையும் தமதாக்க முயற்சித்தனா். கன்னியருக்குக் கொடுத்ததை அறிந்து, ஆத்திரத்தையும், ஆவேசத்தையும் சிஸ். சேவியரிலேயே கொட்டினா். அவமானமாகப்பேசினா். கள்ள வழக்குத்தொடுத்து பொய் குற்றம் சுமத்தினா்.

தனி ஒருத்தியாய் உலைநடுவே புடமிடப்படும் பொன் போல அத்தனையையும் ஏற்றுக்கொண்டாள். இத்தனை சோதனை நடுவேயும் அமைதியாக இருந்தார். இறுதிவரை நீதிகோரிப் போராடினா். போராட்டம் மாதக்கணக்காக நீடித்தது. எவ்வகை மனித ஆறுதலும் கிடைக்கவில்லை.

"கல்வாரித்தியாகத்தின் உச்சி வரை தைரியமாய் முன் செல்வேன்" என்று சூழ்ந்து வந்த சூறாவளி மத்தியிலும் சுடர் வீசும் ஒளியாக இறுதிவரை விளங்கினாா். எதார்த்த வாதிகளை இந்த ஏமாற்று உலகம் சும்மா விட்டு வைப்பதில்லை. இதற்கு சிஸ். சேவியா் விதிவிலக்கு அல்ல. எத்துன்பம் நேரிடினும் அனற் காற்றிடை வீசும் இளம் தென்றலாக விளங்கினாா். இவரது விசுவாசமும் நேர்மையும் துன்ப உலையில் நன்கு புடமிடப்பட்டதன் விளைவாக 1849ம் ஆண்டு ஐப்பசி 15ம் நாள் திருக்குடும்ப சபையில் நித்தியமாகத் தன்னை அா்ப்பணித்துக் கொண்டார்.

1852 ஆவணி 8ம் நாள் இறைவனின் சொந்தக் குமாரத்திக்குரிய வாக்குறுதியை நிறைவேற்றினாா். இவரது புனித வாழ்வின் ஓட்டத்தைக் கண்டு அகமகிழ்ந்த நிறுவுனா். இவரை நவகன்னியா் தலைவியாக நியமனம் செய்தாா். 6 வருடங்கள் முழுமையான கையளித்தலுடனும் தெய்வ பயத்துடனும் ஒப்படைக்கப் பட்ட பணியை இனிதே நிறைவேற்றினாா்.



"தியாகத்தின் மலை உச்சியை நீங்கள் அடைய நேரிடினும் தைரியமாக இருங்கள். என்ற மேற்கோளுடன் இளம் துறவிகளை "இறைவன் மாத்திரம்" என்ற உயர்ந்த அழைப்பிற்குத் தயாராக்கினாள். அழைப்பு இலங்கைக்கு பயணமாகும் குழுவிற்குத் தலைமை தாங்கும் பொறுப்பு மதா் சேவியா் மேல் சுமத்தப்பட்டது. சபை முதல்வியின் இத்தெரிவையும், விருப்பத்தையும், தெய்வ திருவுளம் என மத சேவியா் ஏற்றுக் கொண்டார். வாழும் வயதில் நோயினால் பலிகொள்ளப்பட்ட, தனது மூத்த மக-ளின் இழப்பை ஒருவாறு தாங்கி, நொந்து கொண்டிருக்கும் தனது வயோதிபப் பெற்றோரிடம், இதனை எவ்வாறு தெரிவிப்பது? தள்ளாப்பராயத்தின் ஒரே ஒரு நம்பிக்கை மதா் சேவியா் மட்டும்தான். ஒரு கண்ணை இழந்தவா்களிடம், மறு கண்ணையும் கேட்டால்! மதா் சேவியரின் மனம் வேதனையால் வெந்தது.

பிரியாவிடை சொல்லும் காலம் நெருங்கியது உங்களிடமும் என்னிடமும் கடவுள் ஒரு பெரிய தியாகத்தைக் கேட்கிறாா். பிரான்ஸ் நகருக்கு வெளியே, எனக்கு அழைப்பு வந்துள்ளது. என்று மகள் கூறியபோது, கண்களில் நீா் மல்கி, பெற்ற மனமும், பிள்ளை மனமும் ஒன்றாக வெந்தன. இலங்கை புறப்பட வேண்டிய நாளும் நேரமும் நெருங்கி வந்தது. அன்பில் கட்டுண்டிருந்த உள்ளங்களைப் பிரிவுத்துயா் வாட்ட ஆரம்பித்தது. பெற்றவரை, பிறந்த மண்ணை, ஒரே இலட்சியத்திற்காகத்தம்மை அா்ச்சனையாக்கிக் கொண்ட சகோதரிகளை தலைவிகளைப் பிரிவது என்றால் அத்துயரம் பெரும் வேதனையும் சோதனையுமாகவே இருந்தது.

என்றாலும் எம் ஆதித்தாய்மாா் வீர நெஞ்சம் படைத்தவா்கள். ஆன்ம வாஞ்சையும், இளமைத் துடிப்பும், அனைத்திலும் நல்ல அனுபவமும், தூய்மையும், அழகும் கொண்ட 6 சகோதரிகள் பயணத்திற்குத் தயாா் ஆகினா். மதா் சேவியருக்குப் பிரயாணம் என்றால், ஒவ்வாமை நோய் ஒட்டிப் பிறந்து உபாதிக்கும். இது இவ்வாறிருக்க, இலங்கையில் இருந்து கத்தோலிக்க பெண் துறவிகளுக்கு எதிராக ஒரு கிறிஸ்தவ பிரமுகா் வெளியிட்ட பத்திரிகைப் பிரசாரமும் இவா்களை வந்து சோ்ந்தது. இதனால் முன் பின் அறியாத, கடல் கடந்த பூமியில் தம் குமாரத்திகளுக்கு என்ன நெருக்கமோ என்று சபைத் தலைவி மதா் மேரி ஒவ்த குறோஸ் சிந்திக்கலானாா். எது எப்படி நடப்பினும், அழைத்தவா் வழிநடத்துவாா். என்ற அசையாத மன உறுதியை மதா் சேவியா் வெளிப்படுத்தினாா்.

**அருட்சகோதரி அம்புறோஸின் மார்க்**

மீண்டும் பயணம் ஆரம்பமாகி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செங்கடல் வழியாக ஏடன்துறைமுகத்தை அடைந்தனா். அங்கு ஓரிரு நாட்கள் ஆறிக் கொண்டு, பயணத்தின் இறுதிக்கட்ட மாக ஒன்பது நாட்கள் காலிதுறைமுகம் நோக்கி "எக்கோ" கப்பல் தொடா்ந்தது. ஐப்பசி 19ம் நாள் ஒரு ஞாயிற்றுக்கிழமை கரை சோ்ந்தது. மாலுமி உட்பட அனைவரும் நன்றிப் பெருக்கோடு இறைவனுக்குத் திருப்பலி செலுத்தினா். இவா்களைக் காத்திருந்த மக்கள் அன்போடு வரவேற்றனா். கன்னியா் வருகை காட்டுத்தீ போல் எங்கும் பரவியது.

யாழ் ஆயரின் வேண்டுகோளின்படி மேன்மை தங்கிய கவா்னா் மக்காத்தி அவா்கள், ஆங்கில அரசுக்குச் சொந்தமான தமது "பேள்" என்னும் கப்பலில் சகோதரிகளை 22ம் திகதி கொழும்பிற்கு அனுப்பி வைத்தாா்கள். கொழும்பில் கோலா கலமாக வரவேற்கப்பட்டு, சில நாட்கள் அங்கு தங்கி, 31ம் திகதி அதே கப்பலில் யாழ் நகா் நோக்கிப் பயணமாயினா். 1862 காா்த்திகை 2ம் நாள் யாழ் நகரை அடைந்தனா். முதலில் யாழ் 3ம் குறுக்குத் தெருவிலுள்ள வாடகை வீடொன்றில் குடி அமா்ந்தனா். வேறுபட்ட சூழல், சுவாத்தியத்தோடு, அவா்கள் எதிா்கொள்ள வேண்டிய வசதியீனங்களோ அநேகம், "தேவன் மாத்திரம்" என்ற சபையின் அழைப்பிற்கு உண்மையுள்ளவா்களாய் வாழும் வண்ணம் விசுவாசத்திலும் தியாக அன்பிலும், தமது குழுவை உருவாக்குவது தமது கடமை என மதா் சேவியா், உணா்ந்தவளாய், எல்லோருக்கும் நம்பிக்கைக்குரிய தாயாகத் தன்னை அமைத்துக் கொண்டார்.

இயல்பாகவே இரக்கம் அன்பு, கொடைத்தன்மை வாய்ந்த கரும்பு போன்ற இனிய மனம் படைத்தவா். மதா் சேவியா் சிறந்த நிா்வாகி யாழ் மாவட்ட வளா்ச்சியில் குருக்களுடன் உடன் உழைப்பாளியாக இருந்தவா். ஆன்மீக வாழ்வில் மதா் சேவியா் கடைப்பிடித்த வழிமுறைகளை, ஆயா் சமேரியாவும், பிற்காலத்தில் ஆயா் பொஞ்ஞீனும் பாராட்டியதுடன், தமது ஆலோசனைகளினால், சபை அங்கத்தினா், விசுவாசத்தில் முன்னேற உதவி செய்தனா். கண்ணீரோடு விதை விதைப்பவா்கள் மகிழ்வோடு அறுவடை செய்கின்றாா்கள் என்பதற்கொப்ப, மதா் சேவியரின் இடையறா முயற்சியின் நிறைவாக, சபை அங்கத்தவா்களின் விசுவாசம் தியாகம் பரஸ்பர அன்பு சுடா்விட்டு ஒளிரத் தொடங்கின. பணிவாழ்வையும் பற்றிப் பிடித்தது. மதா் சேவியா் தலைமையில் மேரி ஸ்ரனிஸ்லோஸ், மேரிலிகோரி, மாறிதெரேஸ், யோசவ்மேரி, மேரிகெலன் இவா்கள் மகா கனம் பொருந்திய சமேரியா ஆண்டகை அவா்களுடன் *(தொடரும்...)*

# கொவிட் - 19 வாழ்வியலில் ஏற்படுத்திய மாற்றம்

இளவாலை மறைக்கோட்ட பொது நிலையினர் கழகக்கூட்டம் கடந்த 16.08.2020 அன்று மானிப்பாயில் இடம்பெற்றபோது சமகாலத்துக்கு ஏற்ற மேற்படி தலைப்பில் அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனிஅமதிஅடிகளாரால்ஒருசிறப்பான உரை வழங்கப்பட்டது. யாழ் மாவட்ட பொதுநிலையினர் கழகம் இவ்வுரைக் கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

கண்ணால்காண முடியாத ஒரு நுண்ணிய வைரஸ் கிருமி இன்று முழு உலகையே ஆட்டம்காண வைத்துள்ளது. உலகின் கட்டுக்கோப்புக்களைத் தகர்த் தெறிந்து பொருளாதாரத்தையே ஆட்டம் காண வைத்துள்ள இக்கொடிய நோய் எமக்குப் பல அனுபவங்களைக் கற்றுத் தந்திருக்கின்றது.

இந்நோயினால் ஏற்பட்ட பாதிப்பை இறையியல் கண்ணோட்டத்தில் நாம் நோக்கவேண்டும். மனித வாழ்வையே தலைகீழாகப் புரட்டிப் போட்ட இக்கால கட்டத்தில் எமது யாழ் மறைமாவட்டம் துய ருறுவோர் ஆண்டைக் கடைப்பிடிப்பதால், பொதுநிலையினராகியநாம்எமதுதிருத்தூ துப் பணிகளைச் சிறப்பாக முன் னெடுக்க இறைவன் ஒரு அழகான வாய்ப்பைத் தந்திருக்கின்றார். எனவே இறைவனின் திட்டத்தை ஞானத்தோடு ஏற்றுக்கொண்டு பணியாற்ற முன்வர வேண்டும்.

மனித இனம் எப்படியும் வாழலாம் என்று தமது வாழ்வை முன்னெடுக்கும் இக்காலத்தில் இக்கொடிய நோயின் தீவி ரமான பரவல் நேர்மறையான எதிர் மறையான மாற்றங்களை உலகில் ஏற் படுத்தியுள்ளமை கண்கூடு.

இந்நோயின் கொடூரத்தை இறையியல் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது பாவத்தின் அடிமைத் தனத்தில் மற்றும் இறையாட்சியின் பாதையில் இருந்து தவறிப்போகும் உலகை சுத்திக ரிக்கும் ஒரு காலமாக இறைவன் பயன் படுத்தத் திட்டம் போட்டுள்ளார் என்பதை உணர முடிகின்றது.

உலகில் ஒரு புதிய வாழ்க்கை முறையையும் ஒழுங்கு முறையையும் உருவாக்க இறைத்திருவுளம் எம்மை அழைத்து நிற்கின்றது.

கொரோனாவின் தாக்கம் ஒரு உயிரியல் போராக உருவெடுத்து சமூகத் தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இக்கட்டான இக்காலத்தில் பொது நிலையினர்எவ்வாறுசெயற்படவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

- இந்நோயின் தீவிரம் இல்லாமல் போக வும், மருத்துவத் துறையினர் பாதுகாக் கப்படவும், தடுப்பு மருந்து ஆராய்ச்சிகள் வெற்றி பெறவும் தனித்தும் குடும்பமாக வும் குழுமமாகவும் செபித்தல்.
- குடும்பங்ள் ஒவ்வொன்றும் குடும்பத் திருச்சபையாக மாறுதல்
- நோய்த்தொற்றுக் கண்டவர்களை வெறுத்து ஒதுக்காமல் அன்போடும், பரி வோடும் நோய்த் தடுப்பு நடைமுறைக-ளைக் கடைப்பிடித்து பராமரித்தல்.
- வருமானம் இன்றி வறுமையில் வாடும் குடும்பங்களோடு எம்மிடம் உள்ள வற்றைப் பகிர்ந்து கொள்ளல்
- நோய்த்தொற்று ஏற்படாமல் இருக்க உரிய நடைமுறைகளைக் கடைப்பிடித்தல்.
- ஆடம்பரமான வாழ்வைக் கட்டுப்படுத்தி, சுய பொருளாதாரத்தை மேம்படுத்தி வாழ முயலுதல்
- தனிமை, முதுமை மற்றும் கை விடப்பட்ட நிலையில் உள்ளோருக்கு ஆறுதலாகவும் நல்ல சமாரித்தனாகவும் வாழ்தல்.
- இந்நிகழ்வில் மறைமாவட்டப் பொது நிலையினர் கழக இயக்குநர் மற்றும் அருட் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

## யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழகக் கூட்டம்

யாழ் மறைமாவட்ட பொது நிலையினர் கழகக் கூட்டம் கடந்த 01.09.2020 அன்று யாழ் மறைக்கல்வி நிலையத்தில் மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி யோ.யோ.மவுலில் அடிகளா-ரின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் "அடிப்படை மனித உரிமை மீறல்களும், அதற்கான தீர்வுகளும" எனும் தலைப்பில் இளம் சட்டத்தரணி மரியதாஸ் யூட் டினோஸ் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

அனைத்து மறைக் கோட்டங்க ளிலுமிருந்து எழுபதிற்கும் மேற்பட்ட பொதுநிலையினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பயனடைந்தமை குறிப்பிடத் தக்கது.

## துயர் பகிர்கின்றோம்

**கலாபூஷணம் புலவர்** A.W. **அரியநாயகம்** J.P அவர்கள் கடந்த 12.08.2020 அன்று இறைபதமடைந்தார். அன்னார் பாதுகாவலன் பத்திரிகையில் நீண்டகாலமாகத் தமது எழுத்தாற்றலால் இறைமக்களை ஆன்மீகப் பாதைக்கு அழைத்துச் சென்றவர். இவரது இழப்பில் துயருற்றி ருக்கும் அவரின் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கு பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

## யாழ் போதனா வைத்தியசாலை ஆன்ம குருவுடன் தொடர்பு கொள்ள

யாழ் போதனா வைத்தியசாலையில் நோயின் நிமித்தம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் நோயாளர்கள் அங்கு தங்கியுள்ள காலப்பகுதியில் ஆன்மீக நலன்களைப் பெற்றுக்கொள்ள போதனா வைத்தியசாலையில் ஆன்ம குருவாகப் பணிபுரியும் அருட்பணி அருள் சுதர்சன் அமதி அடிகளாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆன்மீகக் குருவுடன் தொடர்பு கொள்ள : 021222 2721, 0776286506 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

## தேவதைகளின்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தேவதை சொன்னது "உங்களுக்கு ஒரு மணிநேரம் தருகிறேன். இதுவரை நீங்கள் எப்படியெல்லாம் வாழ ஆசைப் பட்டு ஏங்கி நிலையாக நின்றீர்களோ அந்த அழகான வாழ்க்கையை வாழ்ந்து கொள்ளுங்கள். இதோ வாழ்க்கை அழகாய் கண்முன் விரிந்து கிடக்கிறது.

போங்கள்! மௌனம் கலைத்துப் பூக்களோடு பேசுங்கள். அருவிதானே இதுவரை மனிதனை நனைத்து. இப் போது உங்கள் கசிந்துருகும் அன்பால் அருவியை நனையுங்கள். வண்ணத்துப் பூச்சிகளின் சிறகுகளில் பயணப்படுங்கள். இன்னும் ஒருமணிநேரம் கழித்து நான் வந்து உங்களை சிலையாக்கி விடுவேன். மகிழ்ந்திருங்கள் என்று ஆசீர்வதித்துப் பறந்தது தேவதை.

ஒரு மணிநேரம் கடந்து விட்டது. காலம் யாருக்காகவும் ஒருபோதும் காத் திருப்பதில்லையே. விரைவாகவே கடந்து ஓடி மறைந்துவிடுகிறது அந்த ஒரு மணிநேரம்.

திரும்பி வருகிறது தேவதை. அந் தக் காதலர்களின் அருகே மெதுவாய் இறங்கி நின்கிறது. அவர்கள் அழகாய் வாழுவதைக் காண ஆசையோடு வந்தது. ஆனால் அவர்கள் செய்ததைக் கண்டு விறைத்து இறுகி சிலையாக உறைந்து போனது. அவர்கள் அப்படி என்னதான் செய்துகொண்டிருந்தார்கள்?

அவர்கள் இருவரும் அருகருகே அமர்ந்திருந்து, காதலி அங்கிருந்த புறாக் களைப் பிடித்து தரையோடு சேர்த்து நசித்து வைத்திருக்க, காதலன் அவற்றின் மீது நாற்றம் வீசும் சேற்றை அள்ளிப் போட்டு அவற்றின்மீது காறி உமிழ்ந்து கொண்டி ருந்தான். அந்தப் புறாக்கள் மீது சேறும் அசிங்கங்களும் வழிந்து ஒழுகிக்கொண்டி ருந்தன.

பின்பு காதலன் காகங்களைப் பிடித்து தரையோடு சேர்த்து அழுத்திப்பிடித் திருக்க காதலி அவற்றின்மீது நாற்றம் வீசும் அழுக்குச் சேறுகளையும் அசிங்கங் களையும் அள்ளி இறைத்துக் கொண்டி ருந்தாள்.

தேவதைக்கு எதுவுமே புரிய வில்லை. விழிபிதுங்கி நின்றது. இவர்கள் என்ன செய்கிறார்கள்? ஏன் இப்படிச் செய்கிறார்கள்? அவர்களிடமே தேவதை கேட்டது. "நீங்கள் என்னதான் செய்கிறீர்கள்?"

அவர்கள் சொன்னார்கள்: "தேவ தையே, நாங்கள் சிலைகளாக இருந்த போது இந்தக் காகங்களும், புறாக்களும் எங்கள் மீது அமர்ந்திருந்து எச்சமிட்டு எச்சமிட்டு எங்களை அழுக் காக்கிக்கொண்டே இருந்தன. அத் துணை கோபத்தோடு கொதித்துக் கொண்டிருந்தோம். இப்பொழுது எமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதுதான் அவற்றைப் பழிவாங்கிக் கொண்டிருக்கிறோம்.

தேவதைக்கு குரல் தழுதழுத் தது. இவர்களுக்கு என்ன சொல்லுவது? ஒரே ஒரு மணித்தியால வாழ்க்கை கிடைத்தது. சிரித்து, மகிழ்ந்து, பூமியை இரசித்து, அழகழ காய் விதம்விதமாய் நேசம் பகிர்ந்து வாழ்ந்திருக்க வேண்டிய வாழ்க்கையை, இப்படி வீணடித்து விட் டார்களே. பழிவாங்கத் துடித்து, ஒரு வரத்தை இப்படிச் சாபமாய் செய்து விட்டார்களே. இனி ஒருபோதும் இந்த வாழ்க்கை இவர்களுக்குக் கிடைக்கப் போவதே இல்லையே. முகம் சிவந்த தேவதை, "வாழ்வின் இரகசியமும், அழ கும் புரியாத மனிதர்களைப் போல நீங் கள் மீண்டும் சிலையாகுங்கள்" என சொல்லிப் பறந்தது. தேவதைகள் இனி உங்கள் பூங்காக்களுக்கு வரப்போவதே இல்லை.

ஒரே ஒரு முறை கிடைக்கும் வரம்போல வாழ்க்கை. யார் யார் மீதோ வீண் கோபங்களைச் சுமந்து திரிந்து வாழ்வை அழுக்காக்கி விடாதீர்கள்.

ஒருவரைப் பழிவாங்க வேண்டு மென்ற எண்ணத்தோடு அலைந்து கொண்டே திரிவதென்பது, அடுத்தவர் தலையில் கொட்டுவதற்காக கைகள் நிறைய நெருப்புத் தணலை அள்ளிச் சுமந்து திரிவதற்கு நிகரானது. அந்தத் தணல் உங்களைத்தானே சுட்டுக் கொண்டே இருக்கும்.

தணலைத் தூக்கித் தூ ரப்போட்டு, கைகளையும் இதயத்தையும் கொஞ்சம் ஈரம் செய்து, வாழ்வின் வெளிகளுக்கு வாருங்கள்! தேவதைக-ளின் மெல்லிய விரல்கள் தூரத்திலிருந்து உங்களைத் தொட்டுக்கொண்டே இருக்கின்றன.

## துணை ஆயராக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்திருப்பலியில் மறையுரையை தமிழ்மொழியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களும், சிங்கள மொழியில் சிலாப மறைமாவட்ட ஆயர் மேதகு வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை அவர்களும் வழங்கினர்.

புதிய ஆயர் தமது முதல் திருப்பலியை வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தில் கொழும்பு வாழ் தமிழ் இறைமக்களுடன் இணைந்து ஒப்புக்கொடுத்தார்.

## இசையாற்றல் என்பது....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் என்னுடைய கலைப்பணிகளையும் அறப்பணிகளையும் அறிந்த நோர்வே அரசு மதித்து என்னைக் கௌரவப்படுத்தியது. முதலில் எனக்கு நீதி மன்றத்தில் ஒரு 'யூரியாக' கௌரவபதவி தந்தது. அதுமட்டுமன்றி பல்கலைக்கழக பட்டமளிப்பு ஒன்றில் மாணவர்களுக்கு வழங்கும் அன்பளிப்பு பெட்டியில் எனது முகப்பு ஓவியத்தினை அச்சிட்டுக் கௌரவப்படுத்தியது.

**உங்கள் கலைவாழ்வில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள்..?**

என்னுடைய வாழ்நாளில் ஐம்பது வருடங்களுக்கு மேல் கலைக்காகச் சேவை செய்துள்ளேன். ஒருவகையில் சொல்லப்போனால் என் வாழ்நாளே கலைக்குள் தான் கரைந்தது.

ஆனால் எப்போதும் மகிழ்வுடன் நான் கலை படைக்கவில்லை. அதிகமான சவால்களுக்கு முகங்கொடுத்தேன். எனது வளர்ச்சியைக்கண்டு பொறுக்க முடியாதவர் கள் குறிப்பாக புலம்பெயர் மண்ணில் இருந்தார்கள். அவர்கள் பல தடைகளை எனக்குப் போட்டார்கள். அவமானம், தோல்வி, இருட்டடிப்பு எனப் பல துயரங்களைக் கலைவாழ் வில் அனுபவித்திருக்கின்றேன். நான் ஒழுக்கத்துடனும், நேர்மையுடனும் இறைபக்தி யோடும் வாழ்ந்த காரணத்தினால் இறைவன் எனக்கு எப்போதும் துணையாக இருந் தார். சவால்களை வெல்லக்கூடியதாக இருந்தது. ஒருதடவை இங்குள்ள சிறுவர் இல்லத்திற்கு உதவுவதற்கென நாங்கள் செய்த நிகழ்ச்சியை அரசியலாக்கி சமூவலைத் தளங்கள் மூலமாகக் குழப்பி எனக்குப்பெரும் நட்டத்தினை ஏற்படுத்தியது மட்டுமன்றி, அந்தச் சிறுவர்களுக்கு உதவவிடாமலும் கூடச்செய்தார்கள். என்றாலும் அத்தகைய சவால்களைக் கண்டு நான் ஓய்ந்து விடவில்லை தொடர்ந்து முயற்சிசெய்தேன். அவ்வாறான கடும் பிரயத்தனங்களால் தான் நான் இன்று உடலா லும் உள்ளத்தாலும் மிகவும் தளர்ந்து நோய்வாய்ப்பட்டு இருக்கின்றேன். எனினும் இறைவன் எனக்குத் தந்த கலை ஆற்றல் என்ற 'தாலந்துகளை' பலவாறாகப் பெருக்கி உள்ளேன், கலையினூ டாகப் பலதையும் சாதித்துவிட்டேன் என்ற நிறைவு எனக்கு நிம்மதியைத் தருகின்றது.

## கொழும்பு உயர்...

( 4ம் பக்கத் தொடர்ச்சி)

இலச்சினையில் கேடயத்திற்கு வெளியே பவனிச் சிலுவையும் எளிமை யான ஆறு குஞ்சங்கள் கொண்ட தொப்பியும் ஆயரைக் குறிக்கின்றது. இறை ஊழி யரான தோமஸ் கருதினால் கூறே பேராயரின் இலச்சினையில் உள்ளபடி இவை காணப்படுகின்றன. இந்த இறை ஊழியரின் முத்திப்பேறு பெற்ற பட்டத்திற்கான ஆவணங்களைத் தயாரித்து, அந்த முயற்சியிலே பணியாற்றுவதற்காக நியமிக்கப் பட்டு (Vice Postulator) அதை நல்ல முறையிலே செய்தார் என்ற பெருமையும் புதிய ஆயர் அன்ரன் றஞ்சித்திற்கு உரியது. பவனிச்சிலுவை புனித யோசேமரியாவிற்கு கிடைத்த காட்சியில் கொடுக்கப்பட்ட திருச்சிலுவையை குறிக்கின்றது. திருச்சிலு வையை எல்லா மனித முயற்சிகளினதும் சிகரமாக வைத்து மண்ணிலே இருந்து அதை உயர்த்தி, அனைவரையும் தம்பால் ஈர்த்துக்கொண்டு புனிதப்படுத்துகின்ற யேசுவின் வார்த்தைகளை நினைவுபடுத்த அழைக்கின்றது.

யோவா. 12:32 ஆடம்பரமற்ற எளிமையான வாழ்க்கை முறையையும் எல்லோருடனும் பண்புடன் பழகும் தன்மையையும் கொண்ட நம் அன்புக்குரிய துணை ஆயர் அன்ரன் றஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகையின் பணி சிறக்க, இறைவ-னின் அருட்கரம் அவரைத் தொடர்ந்தும் வழிநடத்த இறையருள் வேண்டுகின்றோம்.

# பயிர்ச்செய்கைக்கு கியூடெக் உதவி



கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஊடாக சுய பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் பல செயற்றிட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அவ்வகையில் 502 வீட்டுத்தோட்டப் பயனாளிகளும் நான்கு பாடசாலைகளில் 1002 மாணவர்களும் 27 முன்பள்ளிகளைச் சேர்ந்த 502 முன்பள்ளி மாணவர்களும் பயனாளிகளாக சுய விவசாய முயற்சியில் கியூடெக் நிறுவனத்தின் உதவியுடன் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கு உரிய விதை தானியங்களும், விவசாய உபகரணங்களும், நீர்த்தாங்கிகளும், ஆடு வளர்ப்போர்க்கான பண உதவியும் யாழ். பிரதேச செயலர் தலைமையில் 17.08.2020 அன்று வழங்கப்பட்டது.

# சர்வமத விழிப்புணர்வுக் கருத்தமர்வு



சர்வமதங்களுக்கும் இனங்களுக்குமிடையிலான ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்குடன் யாழ். கியூடெக் நிறுவனம் விழிப்புணர்வுக் கருத்தமர்வு ஒன்றை கடந்த வாரம் ஒழுங்கு செய்திருந்தது.

இக் கருத்தமர்வானது கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி S. இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தமர்வில் எல்லா சர்வமதத் தலைவர்களும் ஒன்றுகூடி கிராமம் தோறும் ஒற்றுமையை வலியுறுத்தி எவ்வாறு கிராம முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்ற விழிப்புணர்வுகளை முன்வைத்திருந்தனர்.

# லொயோலா கல்லூரி ஆங்கிலக்கற்கை நெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கி வரும் லொயோலா கல்லூரி (Campus) இன் சான்றிதழ் வழங்கும் நிகழ்வானது 22.08.2020 சனிக்கிழமை அன்று சிறந்த முறையில் நடை பெற்றிருந்தது. இங்கு மூன்று மாத ஆங்கிலக் கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கும் இந் நிகழ்வானது முல்லைத்தீவு லொயோலா கல்லூரி (Campus) இயக்குநர் அருட்தந்தை லோறன்ஸ் அடிகளாரின் தலைமையில் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை A.J. யாவிஸ் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக இவ் ஆங்கிலக் கற்கை நெறிக்குரிய இலங்கைக்கான இயக்குநர் அருட்தந்தை மில்றோய் பெர்னான்டோ அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர். ஏனைய விருந்தினர்களாக பல அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் மற்றும் பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர்.


சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தமது சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். அத்துடன் இசை, நடன நிகழ்வுகளும் அரங்கேறியதோடு நிகழ்வு சிறப்பான முறையில் இனிதே நிறைவுற்றது.

# யாழ்.முல்லை. இளையோருக்கான தலைமைத்துவப்பயிற்சி



முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள புதுக்குடியிருப்புப் பங்கில் உள்ள இளையோருக்கும் யாழ். மறைமாவட்ட இளையோர் ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களுக்கும் இடையிலான ஒன்றுகூடல் நிகழ்வும் தலைமைத்துவப் பயிற்சியும் 22, 23 சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் புதுக்குடியிருப்புப் பங்கில் நடைபெற்றது. முதல் நாள் ஆரம்ப நிகழ்வுகள் மல்லிகைத்தீவு புனித அந்தோனியார் ஆலய வளாகத்திலும் இரண்டாம் நாள் நிகழ்வுகள் புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய வளாகத்திலும் நடைபெற்றன. பங்குத்தந்தை அருட்திரு S.M. சுதர்சன் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் யாழ். மறைமாவட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரீபன் அடிகளாரின் வழிநடத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் இளையோருக்கான தலைமைத்துவத்தை மேம்படுத்தும் விளையாட்டுகள், கருத்துரைகள், அனுபவப் பகிர்வுகள் போன்றன இடம் பெற்றன. இந்நிகழ்வின் வளவாளராக திருமறைக்கலாமன்ற நிர்வாக உறுப்பினர்களில் ஒருவரான திரு. கரன்சன் ஜெகன் கலந்து சிறப்பித்தார்.

# "வலியின் வரிகள்" நூல் வெளியீடு




அருட்பணி ம. மரிசுதன் செ.தா அடிகளாரின் எழுத்துருவில் உருவான "வலியின் வரிகள்" எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த செப்ரெம்பர் 05ம் திகதி யாழ். அருள் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக செபமாலைத்தாசர் சபை மாகாண முதல்வர் அருட்பணி ஏ. பிரான்சிஸ் ஜெயசீலன் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர். இந் நூலானது மாணவர்கள் இளையோரை ஒரு மனப்படுத்தும் மன எழுச்சி நூலாகும். இக்கால இளையோரின் பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்கின்ற பெறுமதி மிகு நூலாக இந்நூல் அமைவதாக ஆய்வுரையில் குறிப்பிடப்பட்டது.

# அன்பிய வாழ்வு பற்றிய மீளாய்வுக் கருத்துக்கணிப்பு

இலங்கைத் திரு அவையில் அன்பிய வாழ்வு அறிமுகம் செய்யப்பட்ட 25வது ஆண்டு நிறைவில் எமது இறைமக்களின் வாழ்வில் இதன் தாக்கம் பற்றிய கருத்துக் கணிப்பொன்று தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்காக பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட கேள்விக் கொத்து ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலைப் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இலங்கைத் தேசிய அன்பிய ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் இக்கருத்துக் கணிப்புச் செயற்பாடுகளை யாழ். மறைமாவட்டத்தின் அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி மில்பர் வாஸ் CMF அடிகளாரின் வழிநடாத்தலில் எல்லா மறைக்கோட்டங்களின் அன்பிய இணைப்பாளர்களாகப் பணிபுரியும் அருட்பணியாளர்களும், அன்பிய ஊக்குவிப்பாளர்களும் மேற்கொண்டு வருகிறார்கள்.




இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.